www.padippakam.com


# புதிய பூமி

PUTHIYAPOOMI — புதிய பூமி

சுற்று 1 டிசம்பர் 1994 விலை ரூபா 7/= சுழற்சி 7


## அமெரிக்கப் பயமுறுத்தல்

அமெரிக்காவிலிருந்து சலுகை விலை அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த கோதுமையின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நன்கொடையாக வழங்கப்பட்டு வந்த கோதுமை முற்றாகவே நிறுத்தப்படலாம் என்றும் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு அமெரிக்கா வழங்கும் கோட்டாவும் நிறுத்தப்படலாம் என்றும் அமெரிக்கா அச்சுறுத்தியுள்ளது.

வொய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையத்தையும் மேலும் இரண்டு அமெரிக்க மின்சாரகம்பெனிகளையும் இலங்கையில் இயங்க அனுமதிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவே மேற்படி நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்துள்ளது.

# மௌனம் ஏன்?

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவும் அவரது பிரதான அமைச்சர்களும் பதவி ஏற்று இரண்டு வாரங்களுக்கு மேலாகி விட்டது. பதவி ஏற்பு உரைக்கும், பத்திரிகையாளர் சந்திப்பு க்கும் பிற்பாடு இதுவரை தேசிய இனப் பிரச்சினையின் சமாதானத் தீர்வுக்கு முன்னெடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி எதுவும் வெளியிடப்படவில்லை. இது பற்றி அரச தரப்பில் கடைப்பிடிக்கப்படும் ஒரு வித மௌனம் பற்றி மக்கள் மத்தியில் பலவித கேள்விகளும் ஊகங்களும் எழுந்துள்ளன.



இனப்பிரச்சினையின் தீர்வுக்கான முன் முயற்சிகளில் இரண்டு அடிப்படையான விடயங்களே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக திருமதி சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் முன்வைத்தார்கள். ஒன்று வட பகுதிக்கான பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தி விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவது. இரண்டாவது இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உரிய நியாயமான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது.

மேற் கூறியவற்றில் முதலாவது அம்சத்தை ஆரம்ப அடியெடுத்தலாகக் கொண்டு பொருளாதாரத் தடைத் தளர்வும் புலிகளுடனான முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையும் இடம் பெற்றது. இந்நிலையில் பாலத்துறைக் குண்டு வெடிப்பும் அதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற்றது. இருந்த போதிலும் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை ஓர் மீற முடியாத ஆணையாக தற்போதைய ஜனாதிபதிக்கு வழங்கினார்கள். ஜனாதிபதி தனது பதவி ஏற்பு உரையின் போது சகல தரப்பு மக்களுக்கும் நன்றி தெரிவித்து கொடுத்த வாக்குறுதிகளைத் தகுந்தவாறு நிறைவேற்றுவதாகவும் கூறினார். நாட்டு மக்கள் குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்கள் உச்சி குளிர்ந்து காணப்பட்டனர்.

ஆனால் அதன் பின் இரண்டு வாரங்கள் பறந்து விட்டன. அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கான செயல் முறைகள் பற்றி எதுவுமே வெளியிடப்படவில்லை. உள்ளார்ந்த ரீதியில் ஏதாவது முயற்சிகள் இடம் பெறுகிறதா என்பதும் தெரியவில்லை. அப்படி இடம் பெற்றால் வரவேற்கப்பட வேண்டியதாகும். இடம் பெறாது விட்டால் விசனிக்கத்தக்கதாகும்.

இரண்டாவது முக்கிய விடயம் யாதெனில் அரசியலமைப்பு பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மூன்று அம்சங்களாக

1. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை
2. அடிப்படை உரிமைகள்
3. தேர்தல் முறை ஆகிய மூன்றுமே குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

ஆனால் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான் புதிய திட்ட ஆலோசனை எதுவும் அங்கே குறித்தொதுக்கப்படவில்லை. இது ஏன் என்பது புரியவில்லை. இதில் தயக்கம் உள்ளதா? அல்லது மயக்கம் இருக்கிறதா?

தற்போதைய அரசியல் அமைப்புத் திருத்தம் அல்லது மாற்றம் ...ள்ள வரையறை முழுமையான அவசியத்தைப் பெறுகிறது. சில வேளை அத்தீர்வுத் திட்டம் பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப்பட்ட பின்பு தான் சேர்க்கப்பட முடியும் என்ற நிலைப்பாடு கடைப்பிடிக்கப்படுமானால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அப்படியான நடைமுறை மக்களுக்கு நம்பகத்தன்மையை வழங்காத செருகல் முறையாகவே அமைந்து விடக்கூடிய தொன்றாகி விடும். உதாரணமாக 1972ம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பில் ஏற்கனவே இருந்து வந்த 29 வது சரத்து அகற்றப்பட்டது. அதனால் தமிழ் பேசும் மக்களிடம் பெற்ற கசப்புணர்வையும் எதிர்ப்பையும் 1987ம் ஆண்டின் 13வது திருத்தத்தின் மூலம் ஏற்படுத்திய 'செருகல்' சரத்தினால் திருப்திப் படுத்திக் கொள்ள முடியவில்லை என்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் பட்டறிவாகக் கொள்வது அவசியம்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்குரிய திட்டமாக வடக்கு கிழக்கு இணைந்த புதிய நிர்வாக அலகும் அதிகாரப் பரவலாக்கலும் வரையறுக்கப்பட்ட சுயாட்சியும் என்பது ஏற்கனவே ஜனாதிபதியாலும் பொதுஜன முன்னணியாலும் பேசப்பட்டவையாகும். அவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டே மக்கள் குறிப்பாக சிங்கள மக்களும் வாக்கு ஆணை வழங்கினார். அப்படி இருந்தும் அரசியல் அமைப்புக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்டவற்றில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அம்சக் குறிப்பு எதுவும் இடம் பெறாமை இருப்பது ஏன்? மக்கள் ஆணைக்குப் புறம்பாக பேரினவாதச்சிந்தனை ஓட்டத்தின் பாதிப்பினாலோ அன்றி அந்நிய ஆலோசனைகளுக்கு செவி மடுத்தோ தீர்வுத் திட்டம் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைப்பதற்குத் தவறினால் 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய' கதையாகி விடுமோ என்றே மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்க முடிகிறது.

எனவே ஜனாதிபதியும் அரசாங்கமும் இதுவரை கடைப்பிடித்த மௌனத்தனத்தைக் கலைத்து விட்டு உடனடியாகவே மேற்கூறிய இரண்டு அம்சங்களையும் செயல் முறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## பதவி எடுக்கும் ஓட்டம்

தமிழர் கட்சிகளும் இயக்கங்களும் ஒருமுகமாக பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கி நின்றதை எல்லோரும் வரவேற்றார்கள். அதன்மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கத்தை வற்புறுத்தி நிற்பார்கள் என்றும் எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பிறகு தமிழ் தலைவர்களில் பலர் தங்களது கட்சி அங்கத்தினர்களையும் ஆதரவாளர்களையும் அரசாங்க சபைகளின், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், இயக்குனர்கள் பதவிகளைப் பெற ஓடித் திரிகின்றனர். அப் பதவிகளைப் பெற கட்சியின் தூதுக்குழுக்களாக சென்று ஜனாதிபதியையும் சந்தித்து வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுனராக தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் ஆர். சம்பந்தனை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதியை வற்புறுத்தி வருவதாக தெரிகிறது. அப்பதவிக்கு எற்கனவே தமிழ்ப் பேராசிரியர் ஒருவரின் பெயரையும் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் பெயரையும் அரசாங்கத்துடன் தொடர்புடைய புத்திஜீவிகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றதாக தெரிகிறது.

அதற்கு மேலாகச் சென்று சம்பந்தனையே வடக்கு கிழக்கு ஆளுனராக நியமிக்க வேண்டும் என்று த.வி. கூட்டணி வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது.

மக்களால் ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட போதும் சிலரை அவர்கள் தமிழர்கள் என்பதற்காக ஏற்கனவே வகிக்கும் பதவிகளிலேயே வைத்திருக்க வேண்டும் என்று த.வி.கூட்டணியானது அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றது. குறிப்பாக கொழும்பில் இயங்கும் அபிவிருத்தி சபை ஒன்றின் முன்னாள் தலைவரைலே தொடர்ந்தும் தலைவராக வைத்திருக்க வேண்டும் என கோரி வருகிறது.

எனவே தமிழர் அமைப்புகள் ஐ.தே. கட்சியை ஆதரிக்காமல் பொ.ஜ. ஐ.முன்னணியை ஆதரித்தார்களே யன்றி ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் பதவிகளை பெறுவதில் மட்டுமே காட்டிய அக்கறையை இன்னும் கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

## காத்திருக்கின்றோம்

போக வேண்டியவர்கள்
உரிய இடங்களுக்கு
போய்ச் சேர்ந்து விட்டார்கள்.
வர வேண்டியவர்கள்
இப்போது தான் வந்துள்ளார்கள்
இருந்து பார்த்து நொந்து
செல்ல வேண்டியவர்கள்
இன்னும் இருக்கின்றார்கள்
இருக்கட்டும்
ஆற்றப் பட வேண்டியவை
அநேகம் இருக்கின்றன.
ஆற்றி முடிப்பார்களா?
நாங்கள்
காத்திருக்கின்றோம்.

எஸ். கௌரி

www.padippakam.com



# சமாதான முயற்சிகளைக் குழப்பச் சதி?

நவம்பர் மாதம் 13ம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் சகலவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி வைத்ததாக செய்திகள் தெரிவித்தன.

மேற்படி ஒருவாரகால யுத்த நிறுத்த அறிவிப்பை புலிகள் இயக்கத் தலைமை புலிகள் இயக்கப் படைப்பிரிவுகளுக்கு 'வாக்கி டோக்கியில்' அறிவிக்கும் போது ஒட்டுக் கேட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்திருந்தது. இலங்கை இராணுவத்தை மேற்கோள்காட்டி இலங்கை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன.

இலங்கை இராணுவத்தினர் ஒட்டுக் கேட்டார்களோ இல்லையோ விடுதலைப் புலிகள் இயக்க தலைமை அதன் படைப் பிரிவுகளுக்கு மட்டுமன்றி அதன் உத்தியோகபூர்வ செய்தித்தாளான ஈழநாதத்தின் மூலமும்பகிரங்கமாக அறிவித்திருந்தது. புலிகளின் வானொலியும் அது பற்றி தெரிவித்துள்ளது.

நவம்பர் 15ம் திகதி வெளிவந்த ஈழநாதத்தின் தலைப்பு செய்தியாக 'சந்திரிகா அரசிற்கு நல்லெண்ண சமிக்ஞை; தலைவரால் ஒருவாரம் போர் இடைநிறுத்தம்' என்ற தலைப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அரசாங்கம் பதவி ஏற்றதைத் தொடர்ந்து ஒரு சமாதான நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருவாரகால போர் நிறுத்தம் செய்வதாகவும் இது தொடர்பாக அரசிற்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இலங்கை வானொலியோ தொலைக் காட்சியோ மேற்படி விபரங்கள் எதனையும் தராமல் வெறுமனே ராணுவம் ஒட்டுக் கேட்ட செய்தியாகவே மக்களுக்கு தந்தது

கொழும்பிலருந்து வெளிவரும் செய்திப் பத்திரிகைகள் அவ்வாறே செய்திகளை வெளியிட்டிருந்தன.


விலை ரூபா 5-00
ஈழநாதம்
HE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY
15-11-94
சந்திரிகா அரசிற்கு நல்லெண்ண சமிக்கை;
தலைவரால் ஒருவாரம்போர் இடை நிறுத்தம்
சகல படைப் பிரிவுகளுக்கும் உத்தரவு

இலங்கை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் மட்டுமன்றி வெளிநாட்டவரும் கூட அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகளுக்காக எடுக்கும் நடவடிக்கைகளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்; உன்னிப்பாக கவனிக்கின்றனர்.

இந் நிலையில் இருதரப்பினரதும் சமாதான முயற்சிகள் பற்றி வெளிப்படையாக, முழுமையாக அறிவிக்கப்பட வேண்டியது அசவசியமாகும்.

ஆனால் கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளோ விடுதலைப்புலிகளே அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்களாக இருப்பதாக காட்டுவதில் நான் முந்தி, நீ முந்தி என்று செய்திகளை வெளியிடுகின்றன. விடுதலைப் புலிகளுடன் சமாதானம் சரிவராது ஏனைய தமிழ் அமைப்புகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்றும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகிறார்கள்.

இந்த வகையில் அப் பத்திரிகைகள் ஏனைய தமிழ் கட்சிகளினதும், இயக்கங்களினதும் தலைவர்களின் பேட்டிகளையும் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றன.

அரச - விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகள் சரியாக தொடங்கப்படவே இல்லை. அதற்கிடையில் சமாதான முயற்சிகள் சரிவராது என்று செய்திகள் வெளியிடுவதில் அவசரம் காட்டப்படுவது ஏன்? ஏனைய தமிழ் அமைப்புகளுடன்நடத்தப்பட்ட சமாதான முயற்சிகள் கடந்த காலத்தில் எவ்வித பயனையும் தரவில்லை என்பது இரகசியமானதல்லவே. அரசின் இராணுவத்துடன் சில தமிழ் அமைப்புகள் கூட்டுச் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக புரிந்த போரும் வெற்றியடையவில்லையே.

அந்த தோல்விகளிலும் சமாதானங்களிலுமிருந்து படித்து புதிய அணுகுமுறைகளை மேற்கொள்ளாமல், பழைய அணுகுமுறைகளை புதிய பெயர்களுடன் மேற்கொண்டாலும் பழைய தோல்விகளும், பழைய அனுபவங்களுமே மிஞ்சும்.

சமாதானத்தை அழுத்திப் பிடிக்க வேண்டிய இந்த நேரத்தில் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தால் ஏற்படப்போகும் பயங்கரமான யுத்தநிலையையும் அழிவையும் பற்றிக் கவலைப்படாமல் அந்த யுத்த சூழ்நிலையிலும் அழிவிலும் அரசாங்கமும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் எவ்வாறு வெற்றியடைவது என்று கற்பனை செய்து கொண்டு கருத்துக்களை வெளியிடுவது வேடிக்கையானது. எனவே சமாதான முயற்சிகளை முறியடிக்கப் பல உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளும் செயற்படுகின்றன. அதில் கொழும்பு பத்திரிகைகள் எந்த சக்தியின் கையாட்களாகச் செயற்படுகின்றனவோ தெரியவில்லை. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும், சமாதானத்தை நிலைநாட்டவும் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள அரசாங்கம் சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கம் கொண்ட கருத்துக்களை விழுங்கி விடாமல் இருப்பது அவசியம்.

சமாதானத்தை நிலைநாட்டும் பாதையில் இறுதிவரை சளைக்காது முன்னேறும் பெரிய பொறுப்பை அரசாங்கம் கொண்டுள்ளது.

அதேபோன்று விடுதலைப் புலிகள் இயக்கமும் சமாதான முயற்சிகளை குழப்ப ஏனைய சக்திகளால் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களுக்கோ, நடவடிக்கைகளுக்கோ அடிபணிந்து விடாமல் தமிழ் மக்களின் உரிமைகளை அரசியல் ரீதியாக நிலைநாட்டுவதில் பொறுப்புடனும், முன்னுதாரணமாகவும் செயற்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினையை தீர்ப்பதில் எவ்வாறு அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையாகவும் விசுவாசமாகவும் நடந்து கொள்ள வேண்டுமோ அதேபோன்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் விடுதலைப் புலிகள் இயக்கம் பெற வேண்டிய வரலாற்று அவசியம் இருக்கிறது.

# அரசியலில் அறநெறி காத்து நின்றவர்

அரசியல் ஒரு சாக்கடை. அது ஒரு அசிங்கமான விளையாட்டு. இவ்வாறு கூறப்படுவதுண்டு. இக் கூற்றில் ஓரளவிற்கு உண்மை இருப்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அரசியல் என்னும் பரந்த துறையில் அசிங்கமான சாக்கடைப் பக்கமும் உண்டு. அதே வேளை அறநெறி மிகுந்த நேர்மையான பக்கமும் இருக்கிறது.

இவை அறியப்பட வேண்டிய உண்மைகளாகும். சுயநலம், சொத்துடமைப் பெருக்கல், சுகபோகம், நேர்மையீனம், பதவிப் போட்டி, இலஞ்சம், ஊழல், மோசடி, கழுத்தறுப்பு இவை அனைத்தும் சாக்கடை அரசியலின் அசிங்கமான பக்கம். மறு பக்கத்திலே பொதுநலம், நேர்மை, ஒழுக்கம், இலட்சியப் பற்று, ஆழ்ந்த சமூக அக்கறை, மனித நேயம், எளிமை வாழ்வு, அர்ப்பணிப்பு, தியாக சிந்தை, மனித விடுதலைக்கான வேட்கை என்பன அரசியலிலே பின்பற்றப்பட வேண்டிய அறநெறிகளாக இருக்கின்றன. முன்னையதை முதலாளித்துவ அரசியல் அரங்கிலே பின்பற்றப்பட வேண்டிய அறநெறிகளாக இருக்கின்றன. முன்னையதை முதலாளித்துவ அரசியல் அரங்கிலே தாராளமாகக் காண முடியும்.

பின்னையதைப் பாட்டாளி வர்க்க அரசியல் இயக்கத்தில் தான் தரிசிக்க முடியும்.

கடந்த நூற்றாண்டின் நடுக்கூறிலே உலகில் பாட்டாளி வர்க்க இயக்கம் கருவும் உருவும் பெற்ற காலம் முதல் மேற்கூறிய அரசியல் அறநெறி வளர்ந்து வந்தது. இந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதல் அவ் இயக்கம் நடைமுறை வெற்றிகளையும், இருப்புக்களையும் பெற்றபோது மேலும் அவ் அரசியல் அறநெறிகள் கோட்பாடுகள் கொண்ட கொள்கைகளாகவும் இலட்சியங்களாகவும் விரிவு பெற்றன. இவை நாடுகள் கண்டங்கள் ஆகியவற்றின் எல்லைகளைத் தாண்டி பாட்டாளி வர்க்க அரசியலாளர்களால் பின்பற்றப்படும் நடைமுறைகளாகியுள்ளன. உயர் நிலைத் தலைவர்கள் தொட்டு அடிமட்ட ஊழியர்கள் வரை இவ் அரசியல் அறநெறிகளைப் பின்பற்றி வந்தனர். ஆயிரம் ஆயிரம் முன்னுதாரணம் மிக்க வீர புருஷர்கள் இந்த அரசியல் அறநெறி மரபிலே தோன்றிப் பணி புரிந்து மறைந்தனர். இன்றும் அந்த மரபு உலகில் பேணப்பட்டு வருகின்றது. சர்வதேசப் பாட்டாளி வர்க்க அரசியல் இயக்கம் பின்னடைவுகளுக்கு உள்ளாகிய சமகாலச் சூழலிலும் மேற்கூறிய அரசியல் அறநெறிநின்று போராடி வரும் சக்திகளின் எண்ணிக்கை வளர்ந்து செல்வதைக் காணமுடியும்.

இவ்வாறு நோக்கும் போது இலங்கையின் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் அவர் அரசியல் அறநெறி நின்று, வாழ்ந்து மறைந்தவர்கள் பலர் நினைவு கூரத் தக்கவர்கள். அவர்களில் ஒருவராக வாழ்ந்து வழிகாட்டி மறைந்தவர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம். தோழர் மணியம் என அன்புடனும் தோழமையுடனும் அழைக்கப்பட்ட கே. ஏ. சுப்பிரமணியம் இறுதி மூச்சுவரை சொல்லாலும் செயலாலும் பாட்டாளி வர்க்க அரசியல் அறநெறி காத்து வாழ்ந்தவர். முதலாளித்துவ அரசியல் சாக்கடைக்குள் திசைதிரும்பிவிடாத பாட்டாளி வர்க்கப் போராளியாக வாழ்வதில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர். நாட்டின் மீதும் மக்கள் மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்ாக வாழ்ந்தவர். ஒடுக்கப்படும் மக்களுக்கும், ஒடுக்கும் வர்க்கத்தினருக்கும் இடையில் தெளிவான கொள்கையை எல்லையாக வகுத்துக் கொண்டதனால் அவர் தனது பாதையில் வழிதவறாப் பயணத்தை சலனமின்றிச் செய்யக் கூடியதாக இருந்தது. இந்த நாட்டின் ஆளும் வர்க்கத்தால் பல்வேறு வகைப்பட்ட அடக்குமுறைகள் அவருக்கு எதிராக இழைக்கப்பட்டன. அவை யாவற்றையும் துணிவுடன் எதிர்கொண்டு தனது இலட்சியப் பாதையில் வீறுநடை போட்டவர் தோழர் சுப்பிரணமியம்.



அண்மையில் பாராளுமன்ற அரங்கிலே தோற்கடிக்கப்பட்ட ஐ.தே.கட்சியின் மக்கள் விரோத, தேச விரோத, பாட்டாளி வர்க்க எதிர்ப்பு ஆட்சியின் கோர விளைவுகளை முற்கூட்டியே சுட்டிக் காட்டி அதற்கு எதிரான முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஐக்கியத்தையும் வெகுஜனப் போராட்டதையும் வலியுறுத்தி, அதற்கான செயற்பாடுகளில் முன்னணியில் நின்றவர். தேசிய ஜனநாயகம் மீட்டெடுத்து நிலைநிறுத்தப்படுவதற்கும், சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கும், ஜனநாயக மாற்று அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுவதற்கும் அவர் ஆற்றிய பணி தீர்க்க தரிசனம் கொண்டவையாக இருந்தது.

தோழர் மணியம் தனது இலட்சிய வாழ்வில் பாட்டாளி வர்க்க அரசியல் அறநெறி காத்து நின்றமைக்காக இந்நாட்டின் பிற்போக்கு சக்திகளால் வெறுக்கப்பட்டார். ஆளும் வர்க்கத்தின் பொலிஸ் அடக்குமுறையால் தாக்கப்பட்டார். அவரது கம்பீரமான உடல் பலமுறை பொலிஸ் வன்முறையாளர்களால் நையப் புடைக்கப்பட்டது. அதனால் அவரது பிற்காலத்தில் கடும் நோயினால் பீடிக்கப்பட்டவரானார். 1989ஆம் ஆண்டு கார்த்திகை 27ம் நாள் அவர் யாவற்றுக்கும் மேலாக நேசித்த நாட்டையும் மக்களையும் விட்டு மறைந்தார். அவரது ஐந்தாவது ஆண்டு நினைவினை நினைவு கொள்ளும் போது ஓர் பாட்டளி வர்க்கப் போராளி தனது வாழ்நாளில் கடைப்பிடித்த அரசியல் அறநெறிகள் எத்தகையவை என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன.

**நந்தன்**

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி

47, மூன்றாம் மாடி
கொழும்பு சென்றல் சுப்பர் மாக்கட் கொம்ளெக்ஸ்
கொழும்பு-11

# முதல் பணி தொடரட்டும்!

இலங்கையின் ஆட்சி அதிகார பீடத்திற்கு யாரை அமர்த்துவது என்ற பிரச்சினைக்கு மக்கள் தகுந்த தீர்ப்பினை வழங்கி விட்டார்கள். பாராளுமன்ற அரசியல் மட்டத்தில் பேரினவாதப் போக்கினை சிங்கள மக்கள் தமிழ் மக்களோடு இணைந்து முறியடித்துள்ளார்கள். ஆனால் இதன் அர்த்தம் சிங்கள பௌத்த வெறித்தனம் கொண்ட பேரினவாதம் அழிந்து விட்டது என்பதல்ல. அது மீண்டும் தன்னை அரசியல் அரங்கிற்கு கொண்டு வர பெரும் பிரயத்தனங்களைச் செய்யும். இதற்கு அடிவாங்கிப் பலவீனமடைந்துள்ள ஐ.தே. கட்சி உகந்த தருணத்தை எதிர்பார்த்து நிற்கின்றது.

அப்படி நடக்காது என அறுதியிட்டுக் கூறுவதற்கு உள்ள ஒரே ஒரு அடிப்படை இன்றைய சூழலைப் பயன்படுத்தி தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர் ஆகிய முத்தரப்பினரையும் உள்ளடக்கிய தேசிய இனப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வினை விரைவாகக் கொண்டு வந்து சேர்ப்பதேயாகும். இதில் காலம் கடத்துவது பிரச்சினையின் தீர்வைக் குலைப்பதற்கு காத்திருக்கும் சக்திகளின் கைகளைப் பலப்படுத்துவதாக அமைந்து விடக் கூடும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசும் அதன் பிரதமராக இருந்த திருமதி சந்திரிகா குமாரணதுங்கவும் எடுத்த நிலைப்பாடு மிகச் சரியானது என்பதனையே ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அமோக வாக்குகளால் அங்கீகரித்து ஆணை வழங்கினார்கள். அந்த ஆணையைப் பலம்பொருந்திய தார்மீக சக்தியாக் கொண்டு ஏற்கனவே முன்னெடுத்த சமாதான முன்முயற்சிகளையும் அதற்கெனத் தேர்ந்தெடுத்துப் பயணித்த பாதையிலும் தொடர்ந்து செல்லுதல் வேண்டும். சமாதானத்திற்கான முன்முயற்சிகள் சரியானவை ஆனால் பாதை மாற வேண்டும் எனச் சில சிங்கள தமிழ் உயர்நிலைப் புத்திஜீவிகள் கருத்து முன்வைப்பது போல் தோன்றுகின்றது. புத்திஜீவிகள் அறிவுபூர்வமாகக் கருத்து வைப்பவர்கள் என்பது உண்மைதான். ஆனால் யதார்த்தமான நடைமுறைகளில் இருந்து விலகி வெறும் கருத்துக்களை முன்வைப்பது தேர்தலுக்கு முன்பிருந்த நோக்கையும் போக்கையும் திசைதிருப்பி விடக் கூடிய ஆபத்தையே தோற்றுவித்து விடக்கூடும். மக்களை மையப்படுத்தாத புத்திஜீவிக் கருத்துக்களால் பயன் ஏற்படப் போவதில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வு என்பதற்குப் பதிலாக பேச்சுவார்த்தையும் அது பலனளிக்காத விடத்து யுத்தமும் என்ற ஒரு விதமான கருத்துப் பரப்பல் யாவற்றையும் தலைகீழாகப் புரட்டக்கூடியதாகும். இது படிப்படியாக யுத்தத்தை நோக்கிய பாதைக்கே இட்டுச் செல்லக் கூடியே அபாயம் கொண்டதுமாகும். மற்றொருவாதமும் அறிவுஜீவிகள் எனப்படுவோரிடம் காணப்படுகின்றது. அதாவது தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் என்போரில் பெரும்பகுதியினர் சமாதானத்திற்கு வாக்களித்திருப்பதால் புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழர், முஸ்லீம் அமைப்புகளுடன் பேசித் தீர்வுக்கு வந்து விட்டால் இலகுவாகப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்பதாகும். இதை விட முட்டாள்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு யுத்த வழிமுறையைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வும் அதன் அடிப்படையில் சமாதானம் சுபீட்சம் நோக்கிச் செல்வதும் என்றே புதிய ஜனாதிபதி கூறி வந்தார். மக்கள் மீண்டும் மீண்டும் அதற்கு ஆதரவு வழங்கி ஜனாதிபதித் தேர்தலில் மீற முடியாத ஆணையையும் வழங்கி விட்டார்கள். இதற்குப் பின்பும் தாமதமோ தயக்கமோ கொள்ள வேண்டிய எதுவும் இருக்க முடியாது. புலிகள் இயக்கத்துடன் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டத்தினைத் தாமதமின்றித் தொடர வேண்டும். அதனைத் தொடர்ந்து இறுதித் தீர்வினை எய்தும் வரை பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும். இதுவே புதிய ஜனாதிபதியை எதிர்நோக்கியுள்ள முழுமுதல் பணியாகும்.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளும் தாங்கள் ஏற்கனவே பல தடவைகளில் கூறியவாறு தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடாக ஏற்றுக் கொள்ளக் கூடியவாறான ஓர் சுயாட்சித் தீர்வுத் திட்டத்தைப் பரிசிலிக்கவும் விவாதித்து ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளத் தயாராக வேண்டும். இருதரப்பினரும் உள்நோக்கங்கள் எதுவுமின்றி முன்னெடுக்கவிருக்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதையே சமாதானத்தை விரும்பும் சகல தரப்பு மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

ஆசிரியர் குழு

## ஜனாதிபதி சந்திரிகா

# எவ்வழி செல்வார்?

இலங்கைத் திருநாடு இது வரை பத்துப் பாராளுமன்றத் தேர்தல்களைக் கண்டு விட்டது. இரண்டு பிரதான கட்சிகள் தத்தமது கூட்டுக் கட்சிகளுடனும், தனித்தும் மாறிமாறி ஆட்சிகளை அமைத்து அதிகாரம் செலுத்தி வந்துள்ளன. ஆட்சியில் இருப்பவர்களை எதிர்க்கட்சியில் இருந்து விமர்சனம் செய்து கண்டித்து அப்புறப்படுத்தி அதிகாரத்திற்கு வர முயற்சிப்பது இயல்பானது. பெருமளவிற்குச் சுலபமான காரியமாகும். ஆனால் பொய், மெய்களைக் கூறியோ அன்றி புதிய வாக்குறுதிகளை வழங்கி ஆட்சி பீடத்திற்கு வந்து விட்டால் அதற்கு மேல்தான் சிரமத்திற்கு மேல் சிரமத்தைச் சந்திக்க நேரிடும். இந்தச் சிரமம் ஆளும் தரப்பில் இருந்து எதிர்க் கட்சிக்கு வருபவர்களுக்கு நன்றாகக் குறைந்து விடும். அவர்கள் தாராளமாக எதிர்ப் பாட்டுப் பாட ஆரம்பித்து விடுவார்கள்.

மேற்கூறியவற்றை இலங்கையின் பாராளுமன்ற அரசியல் அரங்கிலே கடந்த காலங்களில் தாராளமாகக் காணக் கிடைத்தவைகளாகும். தொடர்ச்சியான பதினேழு வருடங்களாக நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழ் தனிக் கட்சி தனி நபர் அதிகார முறை நீடித்து வந்துள்ளது. அதன் பாதக விளைவுகள் மீண்டும் கூறப்படுவதற்கு அவசியமில்லை. மக்கள் அறிந்து தெரிந்து அனுபவித்துக் கொண்டவைகளே தான். இத்தகைய ஒரு கொடூர ஆட்சி அதிகாரத்தை மக்கள் ஆளும் நிலையில் இருந்து அகற்றியுள்ளார்கள். மக்களின் அதிருப்தி வெறுப்புணர்வுகளைத் தக்கபடி புரிந்து கொண்ட பொதுஜன முன்னணியும் அதன் தலைமைத்துவமும் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வாக்குறுதிகளை முன்வைத்து அமோக ஆதரவினைப் பெற்றுள்ளனர். கடந்த வருட மாகாண சபைத் தேர்தல்களில் பொதுஜன முன்னணியின் பக்கம் வீசத் தொடங்கிய மக்கள் அலை தென்மாகாண சபைத் தேர்தலில் மேலும் சரியான திசையில் திரும்பியது. இவ்வருடப் பாராளுமன்றத் தேர்தலிலே அதிக வேகம் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியினரான ஐக்கிய தேசியக் கட்சியை குப்புற வீழ்த்தும் அதிக வேகத்துடன் வீசி ஓய்ந்து விட்டது. ஏறத்தாள இருபது லட்சம் அதிகப்படியான வாக்குகளால் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஜனாதிபதியாகத் தெரிவு பெற்றார். வெற்றிக் களிப்பும், வாழ்த்தொலிகளும், பதவிப் பெறுப் பேற்றல்களும் ஓய்ந்து கொண்டுள்ளன. அடுத்து எடுத்து வைக்க வேண்டிய காலடிகளின் திசை எவ்வாறு இருக்கப் போகிறது என்னும் கேள்வியினைத் தான் நாடும் மக்களும் இன்று எதிர் பார்க்கின்றனர்.

இத் திசைவழி எவ்வாறு அமையப் போகிறது என்பதற்கு அரசும் அதன் தலைவியான திருமதி சந்திரிகாவும் முழுமையான ஒரு வேலைத் திட்டத்தை இதுவரை தெளிவாக முன்வைக்கவில்லை. தேர்தல் வாக்குறுதிகளில் சிலவற்றையும் சில்லறைகளையும் நிறைவேற்ற முடிந்தது நல்லம்சங்களே. ஆனால் அவற்றை அடுத்து ஆற்றப்பட வேண்டியவைகளுக்குத் திட்டவட்டமான தெரிவுகள் எதுவும் முழுமையாக முன்வைக்கப்படவில்லை. ஆட்சிக்கு வந்து மிகச்சிறு இடைவெளி மட்டுமே. சற்று கால அவகாசம் தேவை என்றும் கூறப்படுவது ஏற்கக் கூடியதொன்றாயினும் இந்த இடைவெளி நீண்டு சென்றால் காலச்சக்கரம் வேறு வேறு விளைவுகளைத் தோற்றுவித்து விடக் கூடும் என்பதுதான் மனதில் பதிந்து கொள்ள வேண்டியதொன்றாகும்.

ஜனாதிபதி சந்திரிகா மீது நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் அனைவரும் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்த நம்பிக்கையை எவ்வாறு அவர் பேணிப் பாதுகாத்து அந்த மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செல்லப் போகிறார் என்பது பிரதான விடயமாகும். புதிய ஜனாதிபதி இடதுசாரிச் சிந்தனை உடையவர். முற்போக்கு கருத்துக்களில் அசையாத நம்பிக்கை கொண்டவர். தீவிர ஜனநாயகவாதி. கவிஞானம் மிக்கவர். இருண்டகால ஆட்சியின் ஆகக் கூடிய துயர்களை அனுபவித்துக் கொண்டவர். தமிழ், முஸ்லீம் மக்களின் உணர்வுகளை முன்பிருந்தே உணந்து நின்றவர் என்பன போன்ற சாதக அம்சங்கள் அவருக்குரிய சிறப்புகளாகும். ஆனால் இத்தனையையும் தன்னகத்தே கொண்ட அவர் எந்த வழியில் தனது ஆளுமையைச் செலுத்தி எதிர் கொண்டு நிற்கும் இடர்களைத் தாண்டி பிரச்சினைகளைத் தீர்க்கும் மார்க்கத்தில் செல்லப் போகிறார் என்பதே கேள்வியாகிறது.

புதிய ஜனாதிபதியான சந்திரிகா மூன்று அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அவற்றோடு தொடர்புடைய பல கிளைப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து துணிவுடன் தீர்வு நோக்கிய பாதையில் செல்ல வேண்டி உள்ளது. ஒன்று, உள்நாட்டு, வெளிநாட்டு பணமுதலைகள், பெருச்சாலிகள், கழுகுகளால் சிதைக்கப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்பட்ட தேசிய பொருளாதாரத்தை மீளமைத்துக் கட்டியெழுப்புவது. இதில் ஏற்படும் உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எத்தகைய நடைமுறையினைக் கையாளப் போகிறார் என்பதிலேயே நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தை நோக்கி நிற்கிறது. இரண்டாவது ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மனித உயிர்களின் இழப்பிற்கும், மறைவிற்கும் காரணமாக அமைந்த ஜனநாயக விரோத, மனித உரிமை மீறல்களை செய்து காட்டாட்சி நடாத்தி வந்த அடிப்படைகளை எவ்வாறு ஒழித்து தேசிய ஜனநாயகத்தை நிலை நிறுத்தி உத்தரவாதப் படுத்திக் கொள்வது என்பதாகும். மூன்றாவதாக முன்னெழுந்து நிற்பது தேசிய இனப் பிரச்சினையாகும். இதன்படி மேற்கூறிய இரண்டு முக்கிய பிரச்சினைகளின் தீர்வுக்கு ஓர் தவிர்க்க முடியாத முன்நிபந்தனையாகின்றது. இப் பிரச்சினை உரியபடி தீர்வுக்கு கொண்டு வரப்பட்டு நாட்டில் சமாதானமும் இயல்பு வாழ்க்கையும் நிலைநிறுத்தப்படாது விட்டால் தேசிய பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்வது என்பதோ அன்றி தேசிய ஜனநாயகம் - மனித உரிமைகளை நிலைநாட்டுவது என்பதோ சாத்தியமற்றவையாகவே இருக்க முடியும்.

மேற்கூறிய மூன்று முக்கிய பிரச்சினைகளுக்கான குறைந்த பட்சத் தீர்வுகள் அல்லது மாற்றியமைத்தல்கள் அன்றி நிலைநிறுத்தல்கள் என்பனவற்றைச் செய்ய முற்படும் போது, பல்வேறுவகைப்பட்ட சவால்களுக்கு திருமதி. சந்திரிகா முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். இந்த வகையில் அடுத்து வரும் மாதங்களில் அவர் தனது ஆளுமையை முற்று முழுதாக வெளிக் காட்டியே தீர வேண்டும். அதிலேதான் அவரது எதிர் காலத்திற்கான அரசியல் ஸ்திரப்பாடு தங்கியுள்ளது. உள்நாட்டுப் பெருமுதலாளித்துவ பேரினவாதிகளின் செயற்பாடுகள் ஒருபுறமாகவும், அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் நலன்களை வலியுறுத்தும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றனவற்றின் அழுத்த நிர்ப்பந்தங்கள் மறுபுறமாகவும் இருக்கக் காணப்படுகின்றன. அதே வேளை தேசிய இனப் பிரச்சனைத் தீர்வுக்கு கொண்டுவர விடாது சிக்கலாக்குவதில் அயல் தேசமான இந்தியாவின் தலையீடு ஏற்கனவே தனது வேலைகளைத் தொடங்கி விட்டது. இத்தனைக்கும் நெஞ்சுரத்துடன் முகம் கொடுத்து நிற்கும் ஆற்றல் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் என்பதையே பெரும்பாலானவர்கள் விரும்புகிறார்கள். திருமதி சந்திரிகா ஓர் பிரபுத்துவக் குடும்பத்தில் இருந்துதான் வந்தவர். அவரது தந்தையும் தாயும் ஆளும் உயர் குடும்ப வழி வந்தவர்கள் மட்டுமன்றி பௌத்த சிங்களத் தேசியவாதத்தினை நியாயமானதாக ஏற்றுக் கொண்டவர்களுமாவர். இத்தகைய சூழலில் இருந்து வந்துள்ள போதிலும் திருமதி சந்திரிகா தன்னை ஓர் இடதுசாரியாக, முற்போக்குவாதியாக யாவற்றுக்கும் மேலாக ஓர் தீவிர ஜனநாயகவாதியாகவே பெருமளவிற்கு இனம் காட்டி வருகிறார். அவரது தேர்தல் காலப் பேச்சுக்கள் மட்டுமன்றி ஜனாதிபதிப் பதவியேற்பு வைபவத்தில் நிகழ்த்திய உரை அவரைத் தகுந்தவாறு அடையாளம் காட்டியது.

வெகுஜனன்



படிப்பகம்

www.padippakam.com



## தொழிற்சங்க வியாபாரமோ ஜோர்

# அரசியலோ வெளிவேஷம்!

செங்கோடன் ஜெயபிரகாஷ்

ஆகஸ்ட் 16ம் திகதி ஏற்பட்ட 94ன் வெற்றியின் அடுத்த கட்டம் நவம்பர் 9இல் நிகழ்கின்றது. அமோக வெற்றி! இவ் வெற்றி என்னுடையதல்ல இது நம் வெற்றி என திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க கூறும் போது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

இந்த வெற்றிக்குக் காரணம் எல்லோருக்கும் வெளிப்படை. மாற்றம் வேண்டித் தவித்த மனங்களுக்கு ஏற்பட்டிருந்த எதிர்பாராத உன்னத மாற்றம். சொல்லொன்று செயலொன்று என பிரித்துப் பார்க்க முடியாத புதுப் புது அனுபவங்களை இரண்டு மாதத்துக்குள் அனுபவித்த இலங்கை மக்கள் தமது களிப்பை வெளிக்காட்ட உகந்த சந்தர்ப்பமாக ஜனாதிபதித் தேர்தலை பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு, சமாதானத்தின் மீது பற்றுடன் தீர்க்கமாகவும், நேர்மையாகவும் நடவடிக்கையெடுக்கும் சந்திரிகாவின் தலைமையின் பால் ஏற்பட்ட ஈர்ப்பு வாக்களிக்கத் தூண்டியிருக்கின்றதென்றே கூற வேண்டும். இதற்கு உரிய அமைப்புகளெதுவும் பெரிதாக வக்காலத்து வாங்க வேண்டிய அவசியமில்லை.

பொதுத் தேர்தலுக்கு முன்னரே ஏற்பட்டிருந்த சந்திரிகா - அஷரப் கூட்டு வலிமையுள்ளதாக மாறியது கண்டு முஸ்லீம் மக்கள் தம்மனதில் தோன்றிய நம்பிக்கை அலை வீச்சால் வாக்களித்தனரெனலாம்.

ஆனால் மலையக தமிழ் மக்கள் மத்தியில் சந்திரிகாவுக்கு ஏற்பட்ட வெற்றி யாருடைய வெற்றி என்பதைத்தான் சந்தேகத்தோடு பார்க்க வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் இம்முறை மலையக மக்களை கூறு கட்டி விற்கும் எல்லா அமைப்புகளும் சந்திரிகா சார்பானதாக இருந்திருக்கின்றன.

பொதுத் தேர்தல் காலத்தேயூ.என்.பியானது பொ.ஐ.ஐ.முன்னணியை எவ்வளவு கீழ்த்தரமாக விமர்சித்ததோ அதற்கு ஒரு படி மேலே சென்று விமர்சித்து அப்பாவித் தோட்ட மக்களை பயமுறுத்திய பெருமை இ.தொ.காவையே சாருகின்றது. ஆனால் இன்று சந்திரசேகரனின் நுழைவையும், செல்லசாமியின் தலையெடுப்பையுங் கண்டு தொண்டமான் தனது வாக்குப் பலத்தால் தானே மலையக மக்களின் பிரதிநிதி என அடித்துக் கூறி முழு மந்திரிப் பதவி வாங்கிய கையோடு இந்தியா போய் விட்டார். அங்கிருந்து ஓர் அறிக்கை மலையகத்தின் பல இடங்களில் இ.தொ.கா கொடியின் செம்மஞ்சள் நிறம் மட்டும் தெரியக் கூடியதாக நீலப் பின்னணியில் சிரிக்கும் புதிய உல்லாசத்துறை அமைச்சரின், சந்திரிகாவை ஜனாதிபதியாக்குவோம் சுவரொட்டிகள். அம்மட்டோடு சரி. இ.தொ.கா - (ஐ.தே.க) பா.உக்கள் தலைவன் தமிழகமிருந்து வரும் வரை தலையில் கை வைத்துக் கொண்டு காத்திருத்தலன்றி வேறெதுவும் செய்தார்களா என்பது தெரியவில்லை.



பொதுத் தேர்தல் வரை இரு கட்சிகளும் இனவாதக் கட்சிகள் எனவும் தம் வழி தனிவழியெனவும் கூவிய, தோள் கொடுத்து அரை மந்திரி வாங்கியவர்கள் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதுமே விழித்துக் கொண்டு உடனடியாக சுவரொட்டிகளாக விரிந்ததோடு மாத்திரமன்றி, தம் பிரமுகர்களை பதுளை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளையென மலையகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பி தாமே சந்திரிகாவின் பிரதிநிதி என்பதை வலியுறுத்தி மலையக மக்கள் முன்னணியின் கிளைகளை நட்டுவைக்கும் கைங்கரியத்தோடு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரமும் செய்தார்களென அறியக் கிடைக்கிறது. அறிக்கை விடுவதால் வெற்றியில்லை. அடி மட்டத்தில் வேலை செய்வதாலேயே வெற்றி என இவர்கள் மார் தட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.



அது மட்டுமல்ல தமது வாக்கு தோட்டங்களை பொதுத் தேர்தலின் போது அதீத நம்பிக்கை காரணமாக பலி கொடுத்தவர்களும், தொண்டமானால் குட்டிச் சங்கம், குட்டிச்சங்கமென எக் காலமும் குட்டுப் பட்டு குட்டுப் பட்டு வளரத்துடித்தவர்களான பொ.ஐ.ஐ.முன்னணியின் தோழமையாளர்களான கந்தையா - ராமையா தரப்பினரும் தம்மிடமிருந்த எச்ச சொச்ச பணத்தோடும், பொ.ஐ.ஐ. முன்னணி பா.உக்களின் அனுசரணையோடும் நாமே சந்திரிகாவுக்கு வெற்றியை வாங்கித் தருவோமென அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள்.

செல்லசாமியும் தன் பங்குக்கு விட்டுக் கொடுக்காமல் அருள்சாமி முதலான பரிவாரங்களோடு ஆரோகணித்ததாகத் தகவல். ஆக புத்திரசிகாமணி தவிர மலையகத்தின் தலைவர்கள் யாவரும் சந்திரிகாவின் பின்னால், அப்படியானால் மலையகத்தில் சந்திரிகாவின் வெற்றி யாருடைய வெற்றி?

மலையக தோட்டத் தொழிலாளர்களின் தலைகளின் எண்ணிக்கையை வைத்து அரசியல் நடத்தும் அரசியல் தலைமைகள் இனி இதற்காக ஒரு போராட்டம் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



யானைக்கே புள்ளடி போடும் பழக்கதோச மக்களென வர்ணிக்கப்பட்ட மக்கள் ஒரு முகமாகத் திரும்பி நாற்காலிக்கு போட்டதற்குக் காரணம் தொண்டாவின் கையிலிருக்கும் அற்புத விளக்கு என அரசியல் விமர்சகர்கள் கூறலாம். அல்லது அண்ணன் சந்திரசேகரனின் சரியான தலைமைத்துவத்துக்கு மக்கள் அலை வீசுகின்றதெனலாம். இப்படி ஐந்து சதவீத மக்களின் தீர்ப்புக்கு உரிமை கோரும் அணியிணரின் எண்ணிக்கை விரியும்.

ஆனால், பதினைந்து லட்சத்துக்கும் அதிகமான சிங்கள மக்களின் அபிலாஷையை தீர்மானிக்க இப்படி கூறுகட்டி விற்கும் தலைமைகள் தொழிற்பட்டனவா? சிங்கள கிராமிய மக்கள் குட்டி குட்டி தலைவர்களின் கொத்தடிமைகளாக இல்லாமல் சுயமாகச் சிந்தித்திருக்கும் போது மலையகத்துக்கு மட்டும் ஏன் மாற்று மூளை தீர்மானிக்க வேண்டுமென எதிர்பார்ப்பு. இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏன் அம் மக்கள் சிந்தித்து வாக்களித்தார்களென எண்ண முடியாமலிருக்கின்றது. இதனையே இத் தேர்தலையொட்டி இம் மக்களே யோசிக்க வேண்டியதாகின்றது.

தொண்டமான் உட்கார பனம் பழம் விழுந்ததா? இல்லை வழித் தேங்காய் தெருப்பிள்ளையாருக்கு அடிக்கப்பட்டதா? இது தான் இப்போது முக்கியமான கேள்விகள்.

சந்திரிகாவக்கு தனது வெற்றியில் ஏற்பட்ட சந்தேக சந்தர்ப்பவசத்தால் தொண்டமான் நுழைந்து கொண்டு விட்டாரென ஒரு கணிப்பு. ஆனால், உள்ளே நுழைந்த தொண்டமான் சும்மாயிருப்பரா? செல்லச்சாமியை வெளியேற்று! சந்திரசேகரனின் முக்கியத்துவத்தைக் குறை! என பழைய பல்லவியைப் பாடலாம். மேலும் தனது பேரனுக்கு ஒரு அரை மந்திரியாவது வேண்டுமென குளிர் போர் நடத்தலாம். இதெல்லாம் சரிவராவிட்டால் சந்திரிகாவின் தலைமையில் சந்தேகம் கொண்டு வெளிவந்து விட அவரின் சாணக்கியம் இடமளிக்காது. பூமி புத்ர கட்சி ஆட்சியமைத்தாலும் அவர் மந்திரியாக இருப்பதற்கான வியூகம் அமைத்துக் கொள்வார்.

பாவம் மலையக மக்கள்! எல்லோரும் புதிது புதிதாக அனுபவிக்கும் போது இந்த தீபாவளிக்கு பழைய தொண்டமானையே பரிசாக கொடுத்திருக்கின்றார்.



ஆனால் இவரைப் பழைய தொண்டமானாகவே வைத்திருக்க வேண்டுமா என்பதை மலையக மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

அவனின்றி ஓர் அணுவசையாது என்பதை ஜே.ஆரும், பிரேமாவும் தொண்டாவுக்கு மிகை முக்கியத்துவமளிக்கும் பண்பினை மலையகத்தின் சார்பாக வளர்த்தனர். அதேவேளை அவரை வைக்க வேண்டிய இடத்திலும் வைத்துப் பாதுகாத்தனர். இதே போக்கு சந்திரிகாவாலும் முன்னெடுத்துச் செல்லப்படுமானால் கடந்த 17 வருடத் தொடர்ச்சியை மலையக மக்கள் அனுபவிக்க வேண்டி வருமா?

முன்னைய நாட்களில் தொண்டமானை எதிர்த்துக் கதைப்பது ராஜதுரோகமெனும் உணர்வு மலையக மக்களுக்கு திட்டமிட்டு தீவிரமாக ஊட்டப்பட்டிருந்தது. இதனையே தாரகமாகக் கொண்டு அதிபர்கள், அதிகாரிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்களெல்லாம் நடக்க வேண்டுமென்ற பலவந்தச் சூழல் இ.தொ.காவினரால் ஏனைய சக்திகளின் ஒத்துழைப்போடு ஊரடங்கு உத்தரவு போல் அமுல் நடத்தப்பட்டது.

'வெளிச்சம் வெளியே இல்லை' பாடசாலை தமிழ் தினப் போட்டி நாடகத்தை யாவரும் மறந்திருக்க மாட்டார்கள். அதில் தொண்டாவின் தலையீடு காரணமாக அடுத்து வந்த தமிழ்த் தினப் போட்டி சுற்றறிக்கையில் சமூக நாடகமெனும் பகுதியே காணாமற் போயிருந்தது. அந்தளவுக்கு முழு இலங்கையிலும் தமிழ் எழுத்துலக சுதந்திரத்தை பணிப்பதற்கு தொண்டைமானியம் பயன் பட்டிருந்திருக்கின்றது.

இன்று முழு இலங்கையிலும் நிலவும் தொடர்பூடக சுதந்திர நிலையை இந்த தொண்டமான் பிரவேசம் மலையகத்தில் கட்டிப் போட்டு விடுமா? அந்நிலை நீடித்தால் தொண்டமான் வம்சமே இனி ஆயுட்காலத் தலைமையாக இருக்கும்.

இனி வாய்ச் சவடால் பயமுறுத்தலுக்கு மலையக புத்திஜீவிகள் பயந்து கொண்டிருந்தால் மலையகத்தை தனித் தீவாகவே வைத்திருக்க வேண்டும்.

மலையகத்தை ஒரு தேசிய தலைமையின் கீழ் அணி திரளச் செய்ய வேண்டும். அப்போது தான் புதிய வெற்றியின் கனவு மெய்ப்படும். தொழிற்சங்க வியாபாரத்துக்காக அரசியலை அடகு வைக்கும் இழிநிலையும் மாறும்.

# வடபகுதிக்கான பாதையின் அவசியம்!



1990ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதிய தமிழ் மக்கள் மீதான யுத்தத் திணிப்பின் ஆரம்பத்துடன் வடபகுதிக்கான பாதையும் பயணமும் சீர்குலைந்தன. விபரிக்க முடியாத துன்பங்களுக்கு மத்தியில் சீரழிந்த பாதைகளின் மூலம் வடபகுதிப் பயணிகள் கொழும்பு நோக்கிய பயணம் செய்ய வேண்டி ஏற்பட்டது. இன்றும் அந்த நிலை மாறவில்லை. பாதையும் அப்படித்தான் பயணமும் இப்படித்தான்.

90ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆனையிறவு, கிளிநொச்சி கொக்காவில். மாங்குளம் பகுதிகளில் இராணுவ முகாம்கள் இருந்தன. அதனால் பிரதான வீதிப் பயணம் தடைப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து சங்குப்பிட்டி - பூநகரி ஊடாக காட்டுப் பாதைகளினாலேயே மக்கள் கொழும்புப் பயணத்தை மேற்கொண்டனர். மிகுந்த சிரமங்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட இப் பயணம் கிளிநொச்சி, மாங்குளம், கொக்காவில் ராணுவ முகாம்கள் அகற்றப்பட்டதால் பூநகரி கிளிநொச்சி ஊடாக நடைபெற்றது. இதனையும் பொறுக்க மாட்டாத அன்றைய அரசு பூநகரியை தனது ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ராணுவ - கடற்படை முகாம்களை நிறுவியது. இதன் பின் மக்கள் கொம்படி ஊரியான் கடல் ஏரியின் ஊடாக சிரமம் மிகுந்த இரவு பகல் பயணங்களை மேற்கொண்டனர்.

இப் பயணங்களின் போது ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுகள், ஹெலித் தாக்குதல்கள் போன்றவற்றுக்குப் பலர் பலியாகியும், படுகாயங்களடையும் நிலை ஏற்பட்டது. இப் பதை கூட அதிக காலத்திற்குப் பயணம் செய்ய முடியாத ஒன்றாகியது. வெற்றிலைக் கேணி கட்டைக்காடு ஊடாக இராணுவம் ஆனையிறவு நோக்கி படையெடுத்ததால் கொம்படி ஊரியான் பாதையும் தடுக்கப்பட்டது. பணச் செலவும் உடல் உளத் துன்பங்களும் நிறைந்த மேற்படி கொழும்புக்கான பயணம் மென் மேலும் கடுமையாகியது.

இறுதியாக ஆபத்துக்களை எதிர் நோக்கிய கிளாலிக் கடற்பரப்புப் பாதையின் ஊடான பயணத்திற்கு தயாராகுவதைத் தவிர குடாநாட்டு மக்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. இக் கிளாலிப் பாதையின் ஊடாகவே குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அன்றாட உணவுப் பொருட்களும் எடுத்துச் செல்ல வேண்டி இருந்தது. இன்றும் அது தான் நிலையாக உள்ளது. இக் கிளாலிக் கடற்பரப்புப் பாதையானது முன்னைய அனைத்துப் பாதைகளையும் விட பல்வகை ஆபத்துக்கள் நிறைந்ததொன்றாகும்.

ஒரு புறத்திலே ஆனையிறவு ராணுவ முகாமும் மறுபுறத்திலே பூநகரி ராணுவ - கடற்படை முகாம்களும் அமைந்திருக்க இடைநடுவால்தான் மக்கள் வள்ளங்களின் மூலம் மூன்று மணி நேரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. பூநகரி நாகதேவன் துறையில் அமைக்கப்பட்ட கடற்படை முகாமில் இருந்து அதிவேகப் படகுகளில் கடற்படையினரும் ராணுவத்தினரும் கூட்டாக ரோந்து என்னும் பெயரில் மக்கள் மீதான தாக்குதல்களை நடாத்தி வந்தனர். இவ்வாறான ஓர் கூட்டு ரோந்துத் தாக்குதலிலே பயணம் செய்த பொது மக்கள் இருபதுக்கு மேற்பட்டவர்கள் நடுக்கடலிலே வைத்து வெட்டியும், சுட்டும் வள்ள மூழ்கடிப்பின் மூலமும் கொல்லப்பட்டனர். இதனை விட பல பத்துச் சம்பவங்களில் பய்ணிகளும், வள்ள ஓட்டிகளும் உயிரிழப்பது, படுகாயம் அடைவது, காணாமல் போவது, கைது செய்யப்படுவது எனத் தொடரான சம்பவங்கள் இடம்பெற்று வந்தன. கிளாலிப் பாதையை சட்ட விரோதப் பதை என முன்னைய அரசு பிரகடனம் செய்த பின்பு மென்மேலும் ராணுவ, கடற்படைத் தாக்குதல்கள் அதிகரித்ததுடன் பொருட்கள் ஏற்றி வருவதும் தாமதமாகி தடங்கல்களுக்கு உள்ளாகியது. இதனால் குடாநாட்டில் பொருட்களின் தட்டுப்பாடும் விலையேற்றங்களும் சர்வ சாதாரணமாகிக் கொண்டது.

இவ்வாறாக இருப்பினும் வேறு பாதைகள் இல்லாத காரணத்தால் மக்கள் உயிரைப் பணயம் வைத்து இப் பாதையால் செல்வதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. இப்பாதையை ஒழுங்குபடுத்தி, பாதுகாப்பு வழங்கி, மக்களை இப்பாதையால் போக்குவரத்துச்செய்வதற்கு புலிகள் இயக்கம் தங்களாலான ஒத்துழைப்பை வழங்கினார்கள். இன்றும் அவர்களே மக்களது போக்குவரத்திற்கும் பாதுகாப்பிற்கும் பொறுப்பானவர்களாக இருந்து வருகின்றனர். கடந்த வருடத்தில் பூநகரி ராணுவ - கடற்படை முகாம்கள் மீதான புலிகள் இயக்கத்தின் பாரிய தாக்குதலுக்குப் பின் கிளாலிக் கடற்பரப்பின் ராணுவ - கடற்படைத் தாக்குதல்கள் குறைந்து காணப்படுகின்றது. இருப்பினும் ஆனையிறவில் இருந்து ஹெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்கள் இடையிடேயே தொடரத்தான் செய்கின்றன. இவற்றுடன் இயற்கை அனர்த்தங்களாலும் இக் கிளாலிக் கடற் பயணத்தின் போது பல பயணிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். குடும்பத்தினர் சகலரும் இத்தகைய பயணத்தில் ஒரேயடியாகக் கொல்லப்பட்ட துயரச் சம்பவங்கள் கூட இடம்பெற்றன. பெறுமதி மிக்க பொருட்கள் கடலில் மூழ்கடிக்கப்படுவது அடிக்கடி நிகழும் சம்பவமாகும்.

இன்று ஒரு சராசரியான எந்த மனிதனும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவேண்டி இருப்பின் அல்லது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டுமானால் கடுமையான உபாதைகளைத் தாங்கிக் கொண்டு உயிரைப் பணயம் வைத்தே பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டி உள்ளது. உள்ளூர் மக்கள் மட்டுமன்றி இப் பயணத்தை மேற்கொண்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் இந்த அவலத்தைப் பலமுறை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் எதுவுமே காதில் ஏறிக் கொள்ளவில்லை.

தற்போதைய கிளாலிப் பாதை உயிர் ஆபத்து, உடல் உபாதை கொண்டது மட்டுமன்றி பெரும் பணச் செலவையும் உள்ளடக்கியதுமாகும். ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்பிச் செல்லவும் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. 1990ம் ஆண்டு யூன் யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவதற்கு முன்பு புகையிரதப் பிரயாணத்திற்கான யாழ் - கொழும்பு கட்டணம் குறைந்தது ரூபா 55 மட்டுமே. சொகுசு பஸ்சுக்கான கட்டணம் 125 ரூபாவாகும். இதனுடன் இன்றைய நிலையை ஒப்பிடும் போது எத்தனை மடங்கு என்பதைக் கணக்கிட முடியும். அது மட்டுமன்றி அன்று ஆகக் கூடிய பிரயாண நேரம் 8 மணித்தியாலம் தொட்டு 10 மணித்தியாலங்களுக்கு உள்ளாகவே இருந்தது. ஆனால் இன்று குறைந்தது இரண்டு பகல் இரண்டு இரவுகள் தேவைப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் வாரக்கணக்கில் இடைநடுவில் தங்கி நின்று போக வேண்டிய சந்தர்ப்பங்களும் சர்வ சாதாரணமாகி விட்டமை வடபகுதிப் பயணத்தில் காணக்கூடிய ஒன்றாகும்.

ஆதலினாலேயே தற்போதைய ஆபத்தும் பணச் செலவும் கொண்ட தற்போதைய வடபகுதிக்கான கிளாலிப் பாதைக்குப் பதிலாக பாதுகாப்பானதும் பணச் செலவு குறைந்ததும், குறுகிய நேரத்தில் சென்றடையக் கூடியதுமான பாதையின் அவசியம் வற்புறுத்தப்படுகிறது. அதற்கு உடனடிச் சாத்தியமாகக் கூடிய ஒரே ஒரு பாதை சங்குப்பிட்டி - பூநகரிப் பாதையேயாகும்.

பூநகரியில் ஒரு சிறு இடத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகாமை அகற்றுவதன் மூலம் இப் பாதையினைத் திறந்து இலகுவான பயணத்திற்கு ஏற்பாடு செய்ய முடியும். ராணுவத்தினர் இதற்கு சம்மதிக்க மாட்டார்கள் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. மக்களை முதன்மைப்படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் புதிய அரசாங்கம் ராணுவத்தின் மீது உரிய அழுத்தத்தைக் கொடுத்து பூநகரியில் இருந்து அதனை அகற்ற முடியும். அவ்வாறு செய்வதையே புலிகள் இயக்கமும் விரும்புகின்றது. ஆனையிறவுப் பாதை எவ்விதத்திலும் உடனடிச் சாத்தியமற்றதாகும். வெறும் கற்பனையிலும், உண்மை அறியா ஊகங்களிலும் போக்குவரத்துப் பாதையினைச் சீராக்க முடியாது.

பதவிக்கு வந்த அரசு தமிழ் மக்களின் துன்ப துயரங்களையும் அன்றாட நெருக்கடிகளையும் உணர்ந்துள்ளது போன்று உடனடி நடவடிக்கைகள் சிலவற்றை எடுத்திருந்தமை வரவேற்கக் கூடியதேயாகும். அதன் தொடர்ச்சியை இடைநிறுத்தாது, ராணுவ ஆலோசனைக்குச் செவி சாய்க்காது மக்களது அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்வதே விவேகமானதாகும். தாமதமின்றி புதிய ஜனாதிபதி இப் போக்குவரத்துப் பாதையின் சீராக்கலுக்கு உடனடிச் செயல்லாட்டில் இறங்குவது அவசியமானதாகும். இப் பூநகரிப் பாதையின் ஊடே இனப் பிரச்சினையின் தீர்வுக்கான சாதகம்மிக்க நகர்வினையும் நகர்த்த முடியும் என்று நம்ப முடியும்.

அ.பூபதி

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்து சேர்வதற்கு

| | ரூபா |
|---|---|
| வடபகுதிக்கு வெளியே | |
| செல்வதற்கான விண்ணப்பப்படிவம்- | 100.00 |
| அனுமதி அட்டை பெற பிணை | 200.00 |
| (50 வயதுக்கு மேற்பட்டோருக்கு தேவை இல்லை) | |
| யாழ். கிளாலி பஸ் | 75.00 |
| கிளாலி ஆலங்கேணி வள்ளம் | 250.00 |
| ஆலங்கேணி நல்லூர் உழவு யந்திரம் | 30.00 |
| நல்லூர் ஓமந்தை பஸ் | 350.00 |
| ஓமந்தையில் இருந்து சைக்கிளுக்கு | 50.00 |
| வவுனியா பிறவுன் அன் கம்பெனிவரை பஸ் | 10.00 |
| புகையிரத நிலையம் வரை | 20.00 |
| வவுனியா கொழும்பு புகையிரதம் | 45.00 |
| இரண்டு பகல் இரண்டு இரவு உணவுச் செலவு | 100.00 |
| | 1230.00 |

கொழும்பில் இருநது யாழ்ப்பாணம் போய்ச் சேர்வதற்கு

| | ரூபா |
|---|---|
| கொழும்பு வவுனியா புகையிரதம் | 45.00 |
| தாண்டிக்குளத்திலிருந்து பஸ் | 10.00 |
| பொதிக்கு | 50.00 |
| இறுதி ராணுவ சோதனைச் சாவடிக்கு | |
| அப்பால் சைக்கிளில் செல்ல | 100.00 |
| ஓமந்தையில் இருந்து நல்லூர் பஸ் | 350.00 |
| ஒரு பொதிக்கு | 50.00 |
| நல்லூரில் இருந்து கடற்கரைக்கு உழவு யந்திரத்திற்கு | 50.00 |
| வள்ளத்திற்கு | 250.00 |
| பொதி இருப்பின் குறைந்தது | 50.00 |
| கிளாலி யாழ்ப்பாணம் பஸ் | 75.00 |
| ஒரு பொதிக்கு | 50.00 |
| ஒரு பகல் ஒரு இரவு சாப்பாடு வழிச் செலவு | 100.00 |
| | 1180.00 |

## எல்லாம் அவராலே

"மலையக தோட்டத் தொழிலாளர்கள் மா, சீனி, பாண், பருப்பு போன்றவற்றைக் குறைந்த விலையிலே வாங்கக் கூடியதாக இருப்பதற்கு காரணம் மலையகத்தை சேர்ந்த ஒருவர் வாணிப உணவுத்துறை அமைச்சராக நியமனம் பெற்றதே ஆகும்" என்று பதுளை பிரதேசத்தில் உரையாற்றிய ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தீபாவளி முற்பணமாக ஒரு தொழிலாளிக்கு ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்ததும் அவரே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காத்தடிப்பது யாராலே? மழை பெய்வது யாராலே? சூரியன் வருவது யாராலே? இரவு வருவது யாராலே? பொழுது விடிவது யாராலே?.... எல்லாம் அவராலே என்று கூறுவது ஒரு பாடல். அதனை பாடி மலையக மக்களை 'அரசியல் மயப்படுத்த' முயற்சிப்பவர்கள் விளைவை அனுபவிப்பார்கள்.

'கேப்பையில நெய் வருதுனா கேட்பாருக்கு மதி எங்கே போய்ச்சாம்'

www.padippakam.com



# கைலாசபதியை மறந்து யாழ். இலக்கிய ஆய்வா?

## உண்மை மாக்சியவாதி யார்

கோபாலகிருஷ்ணன்

விபவி கலாசார மையத்தின் ஏற்பாட்டினால் யாழ்ப்பாண சமூகம் ஒரு பன்முக ஆய்வு என்ற தலைப்பில் கொழும்பில் செப்டெம்பர் 19ஆம் திகதி நடைபெற்ற கருத்தரங்கில் சண்முரெட்னம் பின்வருமாறு குறிப்பிட்டார்

(அ) ஈவேரா போன்ற பகுத்தறிவாளர்களையும் பெண்விடுதலை பற்றி பேசுவோரையும் தேசியவாதிகளையும் மாக்ஸிய வாதிகள் என்று அழைப்பதில் தவறேதும் இருக்கமுடியாது.

(ஆ) லெனின் மாக்சிய தத்துவத்தின் அடிப்படைகளை தகர்த்தார்!

மேற்படியுள்ளவாறு சண்முரெட்னம் கூறியிருக்க மாட்டார் என்று சித்தி சந்தேகம் கொள்ளத் தேவை இல்லை. அவர் ஈவேராவை மாக்சியவாதியாக காண்கிறார் என்பதை சுத்தமான கற்பனைவாதமாக சித்தி கொள்ளவும் தேவை இல்லை.

நான் உட்பட அக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சண்முகரெட்னம் கூறிய விடயங்களுக்கு சாட்சிகளாக இருக்க முடியும். அக்கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய இ.தம்பையா சண்முரெட்னம் பேசுவதற்கு முன் சித்திரலேகா மௌனகுருவை விமர்சித்து பேசிய ந.இ. ரவீந்திரன் என்போருடனும் தொடர்பு கொண்டு அறிய முடியும். உங்களுக்கு அருகில் வசிக்





கும் சித்திரலேகா மௌனகுரு கலாநிதி மௌனகுரு ஆகியோரிடமும் உண்மையை அறிந்து கொள்ளமுடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக விபவியில் இருக்கும் அன்றைய கருத்தரங்கு நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு நாடா சாட்சியமாக இருக்க முடியும்.

சித்தி குறிப்பிடுவது போல் சண்முகரெட்னம் அவருடன் நெருக்கமானவராக இருப்பின் அவரிடம் அவர் உண்மை கூறுபவராக இருந்தால் சண்முகரட்னத்திடமும் தொடர்பு கொண்டு உண்மையை அறிந்து கொள்ளல் முடியும்.

சோவியத் யூனியினின் உடைவிற்குப் பின்னரும், சீனாவில் பொருளாதாரரீதியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினாலும் மாக்சியம், தோற்றுவிட்டதாக முதலாளித்து புத்திஜீவிகள் பேசியும், எழுதியும் வருகின்றனர். மறுபுறத்தில் தங்களை மாக்சிஸ்ட்டுகள் என்று அழைத்துக் கொள்ளும் புத்திஜீவிகள் சிலர் மாக்சியத்திற்கு புதிய புதிய வரைவிலக்கணங்களை கொடுத்து வருகின்றனர். சண்முகரெட்னத்தின் கூற்றும் கூட மாக்சிய புத்திஜீவிகள் எனட்படுபவர்களுடன் ஒத்துப் போவதாகவே இருக்கிறது. இக்கருத்துக்கள் முதலாளித்துவ புத்திஜீவிகளுக்கு உதவுவதாகவும் மாக்சியத்தின் அடிப்படைகளை தகர்ப்பனவாகவுமே அமைகின்றன.

அதாவது வர்க்கமற்ற ஒரு உலகத்தை படைக்க மேற்கொள்ளப்படும் மாக்சியவாதிகளின் பயணத்தை திசைதிருப்பி புதுப்புது வடிவங்களில் முதலாளித்துவத்தை; நிலைநிறுத்த அக்கருத்துக்கள் உதவும்.

மாக்சியம் பற்றி படிக்க ஆவலுடைய இளம் தலைமுறையினரை குழப்பும், அல்லது பிழையாக விளங்கிக் கொள்ள தூண்டும் அவ்வகை கருத்துக்களை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? அக்கருத்துக்களுக்கு எதிராக குரல் எழுப்பும் எனது தார்மீக கடமையிலும் யாரும் தலையிட முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தின் கொடூரங்களிலிருந்து மானுடம் விடுதலையடைய வேண்டும் என்பதில் எனக்கு எவ்வித மாறு கருத்தும் இல்லை. மாக்சியத்தின் வளர்ச்சியால், எனது இருப்பு பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்சமும் எனக்கில்லை.

மாக்சியவாதிகள் என்போர் யார் என்று விரிவாக ஆராய்ந்தால் பல தொகுதிகளை வெளியிடலாம். ஆனால் மாக்சியவாதிகள் என்றால் யார் என்பதை பின்வருமாறு சுருக்கமாக விளக்க முடியும்.

1. இயங்கியல் பொருள் முதல் வாதத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பவர்கள் அதனடிப்படையில் ஒழுகுபவர்கள்.
2. வர்க்கப் போராட்டத்தை ஏற்றுக் கொள்பவர்கள்.
3. வர்க்கப் புரட்சியின் வெற்றியை அடுத்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்பவர்கள்.
4. வர்க்கப் போராட்டத்திலும் கம்யூனிஸ சமுதாயத்தை அமைக்கும் போராட்டத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியின் (புரட்சிகர கட்சியொன்றின்) தலைமையை ஏற்றுக் கொள்பவர்கள்.

மேற்படி விடயங்களுக்கு மாறானவர்கள் ஒருபோதும் மாக்சியவாதிகளாக இருக்க முடியாது. மேற்படி விடயங்களை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவர்களாக அல்லது உட்கிடையாக ஏற்றுக் கொண்டவர்களை மாக்சிஸ்ட்டுகள் என்று கூறலாம்.

ஆனால் மேற்கூறியவற்றை ஏற்றுக் கொள்ளாத பகுத்தறிவுவாதிகள் தேசியவாதிகள் சாதியவாதிகள் பெண்ணியவாதிகள் என்போரை எவ்வாறு மாக்சியவாதிகள் என்று அழைக்கமுடியும். மாக்சியவாதிகள் இனவிடுதலை, தேசவிடுதலை, பெண்விடுதலைப் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அதைத்தவிர இன விடுதலை தேச விடுதலை பெண் விடுதலைப் போராட்டங்களில் மார்க்சிய வாதிகள் அல்லாதோரும் ஈடுபடுகிறார்கள். மார்க்சியத்தின் நண்பர்களாகக் கொள்ள முடியுமே தவிர மார்க்சீயவாதிகளாகக் கொள்ள முடியாது.

மார்க்சியத்தின் பிரயோகம் கால, இட நிலைமைகளுக்கு ஏற்பட வித்தியாசமாக இருக்கின்றது. வளர்ச்சியும் வித்தியாசமாக இருக்கிறது. ஆனால் வர்க்கபேதமற்ற உலகத்தை சிருஷ்டிக்கும் அதன் நீண்ட பயணம் திசை திரும்பலாகாது.

எனவேதான் இறுதியில் பிரதான சமூக முரண்பாடாக இருக்கும் வர்க்கமுரண்பாட்டையன்றி இனமுரண்பாடு, ஆண் -பெண் முரண்பாடு, நாஸ்திக - ஆஸ்திக முரண்பாடு என்பவற்றையே பிரதான முரண்பாடாக கொள்ளுபவர்களை எவ்வாறு மாக்சியவாதிகள் என்று அழைப்பது என்ற கேள்வி பிறக்கிறது.

அதனால் தான் ஈவேராவை, சித்திரலேகா மௌனகுருவை மாக்சியவாதிகள் என்று ஏற்கவேண்டும் என்று சண்முகரெட்னம் கூறியதற்கு எதிராக எழுத வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது.

ஈவேராவின் பகுத்தறிவு வாதம், சீர்திருத்தவாதம் சித்திரலேகாவின் பெண்நிலைவாதம் போன்றன வரையறைக்குட்பட்ட முற்போக்குத் தன்மை கொண்டனவாக இருக்கலாம். ஆனால் அவை மாக்சியத்துடன் கலப்படம் செய்யப்படக் கூடாது. அல்லாது அதுதான் மார்க்சியம் என்று பரப்பக் கூடாது.

ஆகவே அவர்களை மாக்சிஸ்ட்டுகள் என்று கூறுவது அடிப்படையில் தவறாகும்.

மாக்சிம் கோர்க்கி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்சிவிக்) உறுப்பினராக இல்லாதவிட்டத்தும் அவர் மாக்சியத்திற்கு எதிராக செயற்படவில்லை. சோவியத் வர்க்கப்புரட்சிக்கு எதிராக இருக்கவில்லை. ஆனால் லெனின் மறைவுக்கு பின்னர் அவரின் நடவடிக்கைகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கவில்லை.

எனவே மாக்சிம் கோர்க்கியுடன் ஈவேராவையும், சித்திரலேகாவையும் சித்தி ஒப்பிடுவது தவறாகும்.

யாழ்ப்பாண இலக்கியம் பற்றி பேசும் போது இடதுசாரிகளின் இலக்கியத்தை மறுப்பவரும் பேராசிரியர் கைலாசபதியின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ளாதவருமான சித்திரலேகாவை எவ்வாறு மாக்சிஸ்ட்டு என்று சித்தி கூறுவாரோ தெரியாது. (இடதுசாரிகளையும் கைலாசபதியையும் நிராகரிப்பதற்கும், விமர்சன ரீதியாக நோக்குவதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

ஒக்டோபர் மாத புதியபூமியில் கைலாசபதியை மறந்து யாழ்ப்பாண இலக்கிய ஆய்வா என்ற தலைப்பிலான கட்டுரையில் சண்முகரெட்னத்தின் கடந்தகால செயற்பாடுகளின் உச்சத்திலேயே பிழையாக அர்த்தப்படுத்துகிறார் என்பதை எடுத்துக்காட்டவே அவரது தனிப்பட்ட விடயங்கள் சிலவற்றை தொட வேண்டியிருந்தது. அவற்றில் சில சித்தி போன்றவர்களே மனம் வருந்தச் செய்திருப்பினும் அவற்றில் உண்மைகள் இல்லை என மறுக்க முடியாது. இதனைத் தவிர சண்முகரெட்னத்திற்கு எதிராக எந்த நோக்கமும் எனக்கில்லை.

குறிப்பு:
சித்தியின் கட்டுரைக்கு இதே இதழில் பதிலை எழுதுமாறு ஆசிரியர் குழு, கேட்டுக் கொண்டதற்கிணங்க கே.கோபாலகிருஷ்ணன் எழுதி அனுப்பிய கட்டுரையின் சுருக்கம் இதுவாகும்.

## ஈ.வே.ரா. மாக்சியவ

(மட்டுநகர் . சித்தி)

சண்முகரெத்தினம் (சமுத்திரன்) பற்றிய ''கைலாசபதியை மறந்து யாழ்ப்பாண இலக்கியமா?'' என்ற கட்டுரையில் கே.கோபாலகிருஷ்ணன் சமுத்திரன் பற்றிய தனிப்பட்ட தகவல்களில் பல பிழைகள் உள்ளன.

நான் அவரை நீண்டகாலம் நன்கு தெரிந்தவன் என்பதால் சில உண்மைகளை புதிய பூமி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது எனது கடமையாக எண்ணுகிறேன். சமீபத்தில் சண்முகரெத்தினம் (சமுத்திரன்) மட்டுநகர் வந்தார். அவருடன் நீண்ட நேரம் பல வருடங்களின் பின் உரையாடினேன். சமீப கால அரசியல் நிலைமைகள் பற்றியும் தற்போதைய உலக நோக்கில் உணரப்படும் மாக்சிய நிலைமை பற்றியும் அவருடைய நிலைமை பற்றியும் என்னால் உணர முடிந்தது. புதிய பூமியில் வெளிவந்த அவரது கருத்துப் பற்றிய விடயங்கள் பிழையெனவே நான் கருதுகிறேன். பெண்நிலை வாதம், பகுத்தறிவுவாதம் போன்றவற்றையிட்டு அவரது கருத்துக்



க. கைலாசபதி

கள் மிகவும் தெளிவானதே.

இவேரா பற்றிய கணிப்பீட்டில் ஆரம்ப அறிவுள்ள மாக்சீட்டுகள் கூட தெளிவான கண்ணோட்டமுள்ளவர்கள். ஈவேரா ஒரு சீர்திருத்தவாதி, முற்போக்குவாதி என்று பேசப்பட்ட போதிலும் அவர் சோவியத் நாடு சென்று வந்தவர் என்ற போதும் கூட அவர் ஒரு மாக்சீயவாதியல்ல. தமிழகத்தில் பிராமணீய எதிர்ப்பும் திராவிட சமுதாய நிலமானிய ஆதரவு எண்ணங்களும் நிறைந்தவராய் இருந்த ஈவேராவை சமுத்திரன் மாக்சீயவாதியாய் காண்கிறார் என்பது சுத்தமான ஒரு கற்பனை வாதமாகும். கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் பெண்நிலைவாதியுமான திருமதி.சித்திரலேகா பற்றிய கருத்துக்களும் பிழையானவையாகவே எனக்குத் தெரிகின்றன. சண்முகரெத்தினம், சித்திரலேகா வகையறாக்கள் தங்களை தாங்களே மாக்சீஸ்ட்டுக்கள் என்று கூறிக் கொள்வது தங்களுடைய அழிவுக்கே அன்றி ஆக்கத்திற்கல்ல என்ற வரிகள் விசமத்த

னமாய் உ
இது நகை
ளது. அவ
கொள்ளத்
என்று கட்
டிக் கொ
வேண்டும்
பெண்நி
வாதம் பற்
ரின் மாக்சீ
என்பதும்
தெளிவுப
அவர் ப
பற்றி எ
என்ன
அறிய
NLFT யின்
ஒரு புத்தி
டார் என்
என்பதை
ருக்கு NLF
இருந்திரு
அதில் எந்
இருக்கவி
யினர் அறி
களை NLF
இருப்பின்
பட்டிருக்க
சியல்
நாட்டைவ
ஐரோப்பி
டம் பெற்

ளையும்
றும் கூறியு
தமான டெ
எனவே
இருக்கை
கரெத்தின
ரத்தில் ஈடு
வில்லை.
கில் அவர்
தையும் ஈ
சொல்லிய
உணர மு
மாக்சீஸ்ட்
பார் என்
முடியவில்
பட்ட வாய்
யிற் கட்
பான தக
பார்க்கைய
நடைபெற்
கருத்துக்க
மையாக
இச்சந்தர்ப்
துக்கு வரு
திலும் உ
நம்பும் ஒ
மேதை
கியின் ''த
திய முகவ
பங்குகொ
வொருவரு
டியது இந்
ஒரு பாட்
பிரகடனம்
ஆனால் இ
ஒரு மாக்
சத்தை ஏ
அல்ல ஆ
பெரும்
சோவியத்
விரும்பப்
எனவே ம
சீயம் என்
மாக்சீய
தப்பட
னும் இன்

குறிப்பு:
ஒக்டோப
வந்த கை
யாழ்ப்பா
என்ற கட்
மட்டக்கள
அனுப்பிய
சுருக்கி இ

## மறைவுக்கு வருந்துகின்றோம்

தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து செயல்பட்ட நெல்லியடி அம்பலத்தாடிகள் நாடக அமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் சிறந்த மேடை நாடக நடிகரும் முற்போக்கு சிந்தனை கொண்டவருமான நாகபாணி சிவராஜசிங்கம் (நவிண்டில் சிவராஜா) 30-10-1994இல் காலமாகிவிட்டார். 'கந்தன் கருணை', 'ஏகலைவன்' நாடகங்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்ற சிவராஜசிங்கத்தின் மறைவு வேதனைக்குரியதாகும். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ''புதிய பூமி'' ஆறுதல் கூறி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

— ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com



# ஒரு மனிதநேய கலைஞனின் கருத்துக்கள்

**''சமூக விழுமியங்கள்' எமது பாரம்பரியங்கள் என்ற பொன் முலாமிட்ட பதங்களுள் நாம் மூடி மறைத்து வைத்துக் கொண்டு, நடைமுறைப்படுத்தும் சின்னத்தனங்களை வெறுக்கிறேன். இச் செயல்களால் சிதைந்து போகும் மனித உறவுகளை, மனித நேயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சீதனம், சாதி, சுயநலம் ஆளுமையைச் சிதைக்கும் அந்நியக் கல்விமுறைமை, பெண்ணை ஒரு சாதி என நோக்கும் பான்மை என்பவற்றால் தன்னிலிருந்தே தான் அன்னியப்பட்டிருக்கும் எங்கள் மனிதர்களில் பலரை நான் விமர்சிக்கிறேன். தங்கள் ''பிணிகளை''யும் துயரங்களையும் கண்டு கொள்ளாத மக்களைக் கண்டு வருந்துகின்றேன்''. இவ்வாறு பிரபல நாடகக் கலைஞரான குழந்தை ம. சண்முகலிங்கம் புரட்சி 1994 'வெளிச்சம்' இலக்கிய சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.**

**யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப் பீடத்தில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணிபுரியும் இவர் 'மண் சுமந்த மேனியர், அன்னை இட்ட தீ, எந்தையும் தாயும், யார்க்கெடுத்துரைப்பேன் போன்ற தரமான நாடகங்களையும், மற்றும் சிறுவர், பாடசாலை நாடகங்களையும் தமிழ் நாடக உலகத்திற்கு தந்துள்ளார். நாடக அரங்கக கல்லூரியின் ஸ்தாபகர்களில் முக்கியமான இவர் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நாடகக் கலையை வளர்ப்பதில் அரும்பாடுபட்டு வருகிறார்.**

**தமிழ் நாடக ரசிகர்கள், கலைஞர்கள் ஆகியோரின் தேவைகருதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'வெளிச்சம்' சஞ்சிகையில் இடம்பெற்ற இவரது பேட்டியின் சில முக்கியமான பகுதிகளை இங்கு தருகிறோம்.**

**உண்மையான கலைஞன் எப்படி இருப்பான்?**

பாரதிபோல் இருப்பான். தந்தையர் நாடு என்றதும் அவனிடத்தில் ஒரு சக்திபிறக்கும். தொல்லை இகழ்ச்சிகள் தீர, தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி, அடிமையின் மோகத்தை மடித்து, வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் வேட்கை கொள்வான். நிலை கெட்டமனிதரைக் கண்டு நெஞ்சு பொறுத்திடமாட்டான். சிறுமை கண்டு பொங்கிடுவான். எளிமைகண்டு இரங்குவான். ஒளிபடைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும், தெளிவு பெற்ற மதியும் கொண்டவனாக இருப்பான்.

**நாடகக் கலைஞனான தங்களுக்குள் நல்ல கவிஞன் குடியிருப்பதாக நாங்கள் உணர்ந்துள்ளோம். அந்தக் கவிஞனையும் தாங்கள் உயிர்வாழச் செய்திருக்கலாமே. இந்த ஓரவஞ்சகம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

நடிகனாக வந்தது தற்செயலாக. நாடகாசிரியனானது வேறு வழி இல்லாமல். எழுத்தாளர்கள் நாடகம் எழுதாததால் நான் எழுத நேர்ந்தது. நல்ல கவிதைகளைப் படிக்கும் போது ஏக்கம் பிறப்பதுண்டு. எழுதத்துணிவு வரவில்லை. அதனால் என்ன? இப்ப என்ன வயதா போய்விட்டது? நாற்பத்தைந்தில் தீவிரமாக நாடகம் எழுத முற்பட்டவன் தானே! அறுபத்தைந்தில் கவிதையையும் கெடுத்து விட்டுப் போவோமே!


**புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உங்களின் நாடகங்களை ஆங்காங்கே மேடை ஏற்றி வருகிறார்கள். நீங்கள் இந்த மண்ணில் நிலை கொண்ட மக்களுக்குச் சொல்லத் துடித்தவற்றை புலம்பெயர்ந்தவர்கள் அங்கு மேடை ஏற்றும் போது எவ்வளவு தூரம் அவை பொருத்தமாகின்றன?**

எனக்குத் தெரிந்த வரையில் ''எந்தையும் தாயும்'' என்ற எனது ஒரு நாடகம் மட்டும்தான் கனடா, சுவிற்சர்லாந்து, லண்டன் போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது. அந்த நாடகம் கனடாவில் உள்ளவர்களது வேண்டுகோளுக்கமையவே எழுதப்பட்டது. அதன் இலக்குப் பார்வையாளர், புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளே. ஆயினும் அந்த நாடகத்தை நாம் இங்கு தயாரித்தபோது அது பலருக்குப் பிடித்திருந்தது. பலரது மனச்சாட்சியை உலுப்பியது. அது அங்கும் பலரது உள்ளங்களைத் தொட்டதாக, அந்நாடுகளில் தயாரித்தவர்கள் எழுதியிருந்தார்கள். இங்கு உள்ள மக்களுக்காக எழுதப்படும் நாடகங்கள் நிச்சயமாக அங்குள்ளவர்களையும் கவரும் சிந்திக்கத்தூண்டும், தமது தாயகத்தை நினைந்து வருந்த வைக்கும் என்பது எனது நம்பிக்கை, புலம்பெயர்ந்த பலர் இந்த மண்ணையும் மக்களையும் தமது உறவுகளையும் மறக்கமுடியாதவர்களாகவே இருப்பார்கள். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது போன்றதொரு உணர்வு தனக்கு ஏற்பட்டதாக, 'எந்தையும் தாயும்' நாடகத்தை கனடாவில் பார்த்த ஒருவர் எழுதியிருந்தார். இங்குள்ள ஏனைய நாடகங்களைப் பார்க்கும் போதும் அத்தகைய உணர்வு அவர்களுக்கு நிச்சயமாக ஏற்படும்.

**மரபு நாடகம், நவீன நாடகம், மூன்றாம் உலக நாடகங்களுக்கான அரங்கத்தேடல், வீதி நாடகங்கள் என்றெல்லாம் நாடகங்களை வகைப்படுத்திக் கூறப்படுகிறது. இவைபற்றிய உங்களது விரிவான கருத்தென்ன?**

விரிவாகக் கூறுவதாயின் இதுவே தனிக்கட்டுரையாகிவிடும். எனவே சுருக்கமாகவே சிந்திக்க முடியும். அனைத்து மக்கள் மத்தியிலும் தமக்கென்றதொரு மரபு அல்லது பாரம்பரிய நாடகம் இருக்கும். எமது மரபு நாடகங்கள் ''நாட்டுக் கூத்து'' எனப்படுகிறது. இதனுள் பல வடிவங்கள் உள்ளன. தேசிய இனமொன்று எழுச்சி கொள்ளும் போது தனது பாரம்பரியங்களைத் தேடிக்கண்டு கொள்ள முற்படுவது இயல்பு. இந்தப் பணியில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தொடக்கிவைத்த பணிமுக்கியத்துவம் பெறுகிறது. எமது மரபு சார்ந்த கலைகளைப் பேணுவதாயின் அதனைப் பாரம்பரியமாக ஆடி வருகின்றவர்களை இனங்கண்டு ஊக்குவிப்பது அவசியம். எம்மத்தியில் இப்பணி, நன்கு வகுத்தமைத்துக் கொள்ளப்பட்டதொரு கொள்கைத் திட்டத்துக்குமைய நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆங்காங்கு சிலர் தமது மனம்போனவாறு செய்து வருகின்றனர். ஒரு பொறுப்புள்ள பொது நிறுவனமொன்று இப்பணியினை ஏற்றுச் செயல்முறைப்படுத்தவது அவசியம்.

எம்மத்தியில் 'நவீன நாடகம்' என்ற சொற்தொடர் நன்கு புரிந்து கொள்ளப்படாத ஒன்றாக உள்ளது. மேலைத்தேயங்களில், யதார்த்த நாடகங்களின் விளைவாக ஒரு மருட்கை அரங்கு தோற்றம் பெற்று, மக்களை வெறும் பார்வையாளர்களாக மட்டும் வைத்து, சிந்திக்கவிடாத அரங்கமுறைமையாக இருந்ததை எதிர்த்து யதார்த்த விரோத அரங்க வடிவங்கள் தோற்றச் பெற்றன. அதன் முக்கிய முன்னோடியாக ஜேர்மன் நாடக மேதை பேர்டோல்ஃட் பிறெஃட் என்பாரைக் கொள்ளலாம். இதனை உள்வாங்கி எழுபதுகளில் இங்கு தோற்றம் பெற்ற நாடகங்களையே பலரும் நவீன நாடகம் என்கின்றனர். மக்களைச் சிந்திக்கத்தூண்டும் புதிய அரங்கமொன்றுக்கான வடிவத்தைத் தேடிய பிறெஃட் அதில் கையாளக்கூடிய பல உத்திமுறை



களை ஜப்பானிய சீன பாரம்பரிய அரங்குகளில் கண்டார். கீழைத்தேய அரஙகுகள் யாவற்றிலும் இப்பண்பு பொதுவாகக் காணப்படுகிறது. இங்கு, 'நவீன நாடகம்' என்று சொல்லப்படும் நாடகங்களுள் பல, எமது பாரம்பரிய நாடகங்களிலும், ஏனைய கலை வடிவங்களிலும் காணப்படும் ஆற்றுகை முறைமைகளையே பயன்படுத்துகின்றன. இதனை அறியாத சிலர் 'நவீன அரங்கை' அன்னியமானதொரு அரங்கமென்றும், அது எமக்கு அவசியமற்றது என்றும் கூறுகின்றனர். கற்றவர் என்று கருதப்படும் சிலரும் இவ்வாறு கூறி வருவது விசமத்தனமானதாகவும் விசனம் தருவதாகவும் உள்ளது.

இங்கு இன்று காணப்படும் 'நவீன நாடகங்கள்' எமது பண்பாட்டினதும் கலைகளினதும் சாரத்தை எடுத்துத் தமது அடிநாதமாகக் கொண்டே படைக்கப்படுகின்றன. அவை உலகில் அனைத்து கலை அனுபவங்களையும் உள்வாங்கிக் கொண்டு, எமது பாரம்பரியத்தில் அடிபதித்து நின்றே படைக்கப்படுகின்றன. இடையில் வந்த மேலைத்தேய யதார்த்தவாத மருட்கையுள் தம்மை அறியாது சிக்குண்ட பலர், இன்றைய நாடகங்களை வெறுக்க முற்படுகின்றனர். அனைவரும் சுயநலங்களையும், சொந்த லாபநட்டங்களையும் களைந்தெறிந்துவிட்டு, தேசநலனில், மக்கள் நலனில் அக்கறை கொண்டு பேசவும், செயலாற்றவும் முற்பட்டால் பல சங்கடங்கள் கலையுலகிலிருந்து நீங்கும்.

மூன்றாம் உலக நாடுகள், குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள், இந்தியா ஆகியவை தத்தம் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைக்கேற்ற அரங்க வடிவங்களைத் தேடிப்படைப்பதில் முனைப்பாக உள்ளன. அவை யாவும் தத்தம் கலை மரபுகளின் வேர்களைத் தேடுகின்றன. அத்தோடு உலகப் பொதுமையானதொரு மக்கள் அரங்கையும் தேடுகின்றன.

பிறெஃடின் அரங்கு மக்களோடு ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு, நெருக்கம் போதாது என்று அவை கருதுகின்றன.

மக்களும் கலைஞரும் இணைந்து ஆற்றுகையைத் தீர்மானித்து நடத்திச் செல்ல உதவும் வடிவங்களைத் தேடுகின்றனர். ஆதியில் சமயக் கரணத்திலிருந்து தோற்றம் பெற்ற அரங்கம் மீண்டும் அத்தகையதொரு நிலையை -பார்வையாளர் நிகழ்த்துவோர் என்ற வேறுபாடு அற்றதோருஅளிக்கைமுறையை- அடைய வேண்டுமென அவாவுகின்றனர். அவற்றுக்கான முன்னெடுப்புகள் இங்கும் ஆரம்பித்துவிட்டன. நாம் அவற்றைப் பொறுமையோடு பார்த்து, சிரத்தையோடு விமர்சித்து, எமது மக்களுக்கு அவசியமான அவ்வடிவங்களை வளர்த்தெடுக்க உதவ வேண்டும்.

மக்களைத் தேடிப் போகும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டே வீதி நாடகங்கள் தோற்றம் பெற்றன. அவை மூன்றாம் உலகின் ஏனைய அரங்குகள் போன்று தளைகளுள் சிக்குண்டு கிடக்கும் மக்களைத் தேடிச் சென்று சிந்திக்கத் தூண்டும் நோக்கம் கொண்டவையாகவே உள்ளன. இங்கு வீதி நாடகங்கள் ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டு வரினும் குறிப்பிடக்கூடிய வளர்ச்சி அடையவில்லை என்றே கூறலாம். தனித்து அவ்வடிவத்தில் மட்டுமே ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் குழுக்கள் இங்கு இன்னமும் தோற்றம் பெறவில்லை. மரபு நாடகங்கள், நவீன நாடகங்கள், மூன்றாம் உலகுக்கான அரங்கு, வீதி நாடகம் என்று எதையும் நாம் ஆடலாம். அனைத்தையும் இணைத்தும் ஆடலாம். ஆடுவோர், கலை சார்ந்த அறிவும், தேடலும், நேர்மையும் மக்கள்மீது பற்றும் கொண்டவர்களாக இருப்பின், அவர்கள் படைக்கும் படைப்புகள் எல்லா மக்களையும் சென்றடையும். நன்மை பயக்கும்.

**தொடரும் தங்களது கலைஉலக வாழ்க்கையில் இந்த மண்ணின் விடுதலைக்கான கருத்தை, ஆங்காங்கே குறிப்பிடும்படியாக விதைத்துள்ளீர்கள். புதியதொரு சமூக அமைப்பொன்றுக்காகவும் தங்களின் கருத்தைக் கூறியுள்ளீர்கள். இன்று உயிர். கொடுத்துப் போராடும் இந்த உரிமைப் போராட்டத்துக்கும் உங்கள் பங்கு கணிசமானது. எனவே போராடும் தேசத்தின் கலைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

கலை இலக்கியவாதி ஒரு மனிதனல்ல. அவன் ஒரு மக்கள் கூட்டத்தின் மனச்சாட்சியின் குரல்; மானுடத்தின் பிரதிநிதி. எந்த இன்னலும், இடரும், வசதியும், சலுகையும் அவனை நிலை தடுமாறச் செய்யாது; செய்யக்கூடாது. போராடும் தேசத்துக் கலைஞன் ஒருவகையினனாகவும், இல்லாத தேசத்துக் கலைஞன் வேறொரு வகையினனாகவும் இருக்க முடியாது. மனிதன் எப்பொழுதும் மனிதனாகவே இருக்க வேண்டும். கலைஞனும் ஒரு மனிதனே. மனிதம் நிறைந்த மனிதன். அவன் மனத்தில் துணிவு இல்லாது, நேர்மை இல்லாது, உண்மை இல்லாது எதையும் படைக்க முன்வரக்கூடாது. தான் நம்பாததை, நயம் கருதிச் சொல்லக்கூடாது. நம்புவதை துயர் கருதிச் சொல்லாமல் விடவும் கூடாது. சரியானதை எங்கும், எந்நேரமும், எவர்க்கும் சொல்லும் உண்மையான இதயம் இருக்க வேண்டும். மக்களை நம்ப வேண்டும். அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். கற்றதை அவர்களது மேன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதாயின் கலைஞன் தனது மனச்சாட்சியை காலந்தோறும் தரிசித்தவாறு இருக்க வேண்டும். அதுவே அவனது வழிகாட்டி அதைத் தன்னுள் கொன்று புதைக்கும் கலைஞனின் வாயிலிருந்து வருபவை 'நாறும்'.

**தாங்கள் புதுமையைத் தேடும் அவா மிகுந்தவராகக் காணப்படும் அதே நேரத்தில் பழமையின் புனிதப் பிரதிநிதியாகவும் காட்சி தருகின்றீர்கள். எடுத்துக் கொள்ள வேண்டிய புதுமை பற்றியும், கழற்றி விட வேண்டிய பழமை பற்றியும் கூறுங்கள்?**

புதியது என்று ஒன்று இவ்வுலகில் இல்லை; ஒருவர் சொல்லும்

→ 11

படிப்பகம்

www.padippakam.com



# அல்ஜீரியாவும் இஸ்லாமிய அடிப்படைவாதமும்!

இன்று இஸ்லாமிய அடிப்படைவாதம் ஏகாதிபத்தியவாதிகளால் மிகுந்த அச்சத்துடனும் வெறுப்புடனும் நோக்கப்படுகிறது. சோவியத் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் ஏற்பட்டுள்ள குழம்பிய சர்வதேச அரசியற் சூழலில் கம்யூனிஸம் ஒழிந்து விட்டதாகத் தாங்கள் செய்து வரும் பிரச்சாரத்தை தாங்களே மறுக்க முடியாத நிர்ப்பந்தம் ஏகாதிபத்தியப் பிரசாரத்தின் ஊதுகுழல்கட்கு. எனவே புதிய எதிரி ஒன்று உருவாவது அவசியமாகி விட்டது.

முன்பு சோவியத் யூனியனிலும் சீனாவிலும் ஸ்திரமின்மையை ஊக்குவிக்க இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கிளறி விட சி.ஐ.ஏ. போன்ற ஸ்தாபனத்தின் செயற்பட்டன. இன்று இஸ்லாமிய தீவிரவாதம் அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளைப் பயமுறுத்தும் சக்தியாகிவிட்டது. எகிப்தில் நாஸருக்கு எதிராக இஸ்லாமிய தீவிரவாதிகள் செயற்பட்ட போது மகிழ்ந்தவர்களால் அவர்களது இலக்கு சதாத்தாகவும் இன்று முபாரக்காகவும் மாறியள்ள போது அபாயச் சங்கை ஊதவே முடிகிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் பிரதானமாக முஸ்லீம் பெரும்பான்மை நாடுகளிலேயே உள்ளது. அங்கும் ஊழல் மிகுந்த ஆட்சிகளும் பொருளாதார நெருக்கடிகளும் அரச அடக்குமுறையும் மிகுந்துள்ள நிலைமைகளிலேயே இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒரு வலிய மாற்றுச் சக்தியாக வளர்ந்துள்ளது. இந்த நாடுகளிலெல்லாம் அரசாங்கங்கள் மாக்ஸிய அரசியலை வளர முடியாது தடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டன என்பது ஒரு முக்கியமான உண்மை. அமெரிக்க சார்பான ஆட்சியாளர்கள் மட்டுமன்றி அமெரிக்க ஏகாதியபத்தியத்துக்கு எதிராகச் சோவியத் யூனியனுடைய தயவை நாடிய தேசியவாத அரசுகளும் (தமது தேசிய முதலாளித்து நலன்களைக் காக்கவோ புதிய அதிகார வர்க்கமொன்றின் நலன்களைக் காக்கவோ) மாக்ஸிய - லெனிஸிய இயக்கங்களை வளராது மறிப்பதில் மும்முரமாக நின்றன. ஜனநாயகமற்ற இந்த அரசியற் சூழல்களில் பின்தங்கிய சமுதாய வளர்ச்சியும் பொருளாதார நெருக்கடிகளும் உந்திவிடக்கூடிய மாற்றும் சக்திகளுள் தேசியவாதம், பிரதேசவாதம், மதவாதம் என்பன முக்கியமானவை. ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் சமுதாய நிலைமைகட்கேற்றபடி இவற்றுள் ஏதேனும் அல்லது யாவுமே தலைதூக்கலாம்.

ஷாவுக்கு எதிரான இரானியப் புரட்சிக்குப் பின்பு ஏகாதிபத்தியவாதிகளின் மனதில் இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய அச்சம் பல நாடுகளிலும் ஏற்பட்டாலும், அரசியல் அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றக் கூடும் என்று அச்சம் உக்கிரமாகியுள்ள நாடு அல்ஜீரியா தான். இன்று பலவிதமான பயங்கரவாதச் செயல்களில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மும்முரமாக இறங்கியுள்ளதாக் கூறப்படுகிறது. ஆயினும் குற்றம் முழுவதும் அவர்களுடையது தானா என்ற கேள்வி முக்கியமானது. முதலில் அல்ஜீரியாவின் வரலாற்றின் அண்மைக்கால வரலாற்றின் சில தாள்களைப் புரட்டுவோம்.

மிகவும் நாகரிக மேம்பாடுடைய நாடாகக் கருதப்பட்டு வருவது உணவு. உடை போன்ற பல துறைகளிலும் மேலை உலகின் முன்னோடியாக விளங்கிய நாடு அது. பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தை யாரும் மறக்க முடியாது. நவீன சோஷலிஸச் சிந்தனையின் தாயகமும் அது என்றே கூறுவார்கள். ஆயினும் பிரெஞ்சு முதலாளித்துவத்தின் தன்மையோ உண்மையில் மிக அருவருப்பானது. அதன் கொலனித்துவத்தின் கொடுமையை அனுபவித்த நாடுகளின் மக்கள் இன்னும் பல பரம்பரைகட்கும் அதை மறக்க மாட்டார்கள். இந்தோசீனம் கடுமையான போராட்டம் ஒன்றின் முடிவிலேயே பிரெஞ்சுக் கொலனித்துவத்தை முறியடித்தது. (1954ம் ஆண்டு வியற்னாமில் டியென் பியென் ஃபூ எனும் இடத்தில் ஹோ சி மின் அவர்களது வழிகாட்டின் கீழ் கம்யூனிஸ்டுகளது தலைமையிலான சேனை பெற்ற வெற்றி உலகம் இன்னும் மறக்கவில்லை) ஆயினும் வரலாற்றில் இருந்து ஏகாதிபத்தியவாதிகள் எதையுமே கற்க மாட்டார்கள். எனவே பிரெஞ்சுக் கொலனித்துவம் தனது பிற கொலனிகளில் தனது கொடுங்கோல் ஆட்சியைத் தொடர்ந்தது.

அல்ஜீரியாவில் நடந்த தேசிய விடுதலைப் போர் மிகவும் முக்கியமான ஒரு விடுதலைப் போராகும். அதன் வெற்றி பிற பிரெஞ்சுக்- கொலனிகளது விடுதலைக்கும் வழி வகுக்கும் என்ற உண்மையை மட்டும் கொலனித்துவம் நன்கு அறிந்திருந்தது. எனினும் அந்த வெற்றி தன்னால் தடுக்க முடியாத ஒன்று என்பதை அது அறிந்திருக்கவில்லை. தேசிய விடுதலை முன்னணி எனப்படும் விடுதலை இயக்கத்தின் தலைமையிலான போராட்டம் கொடூரமாக நசுக்கப்பட்டது. இதன் விளைவாக விடுதலைச் சக்திகள் அதே மொழியிற் பதிலடி கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களது வன்முறைப் போராட்டத்துக்குப் பதிலாக பிரெஞ்சுக் கொலனித்துவமும் தனது பயங்கரவாதக் குண்டர்படையொன்றை அவிழ்த்து விட்டது. ஆபிரிக்காவின் விடுதலைப் போர்களின் நடந்த மிகக் கொடூரமான நிகழ்வுகள் அல்ஜீரியாவிலேயே நடந்தன என்று கூறலாம். இந்த யுத்தமும் பிற கொலனிகளில் ஏற்பட்ட நெருக்கடிகளும் பிரெஞ்சுப் பொருளாதாரத்தை மிகவும் வாட்டின. பிரெஞ்சு அரசியல் நெருக்கடி உக்கிரமாயிற்று. அரசாங்கங்கள் அடிக்கடி கவிழ்ந்தன. ஆயினும் பிரச்சினை தீரவில்லை. பிரான்ஸில் 2ம் உலக யுத்தத்தின் போது பாஸிஸ எதிர்ப்புச் சக்திகளின் வலதுசாரிப் போக்கின் தலைமையிலிருந்த டெ கோல் 1961ல் பிரான்ஸின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியான பின்னரே, அல்ஜீரியாவின் சுதந்திரம் பிரான்ஸின் முன்னேற்றத்திற்கு அவசியம் என்ற உண்மையைப் பிரெஞ்சுக் கொலனித்துவம் ஒரு படியாக அறிந்து[illegible] விளைவாக 19[illegible] [illegible]ந்திரம் அடைந்தது.

அல்ஜீரியா தேசிய விடுதலை முன்னணியின் (எஃப்.என்.எல்) [illegible] வெல்லா 1962இல் அல்ஜீரியக் குடியரசின் தலைவரானார். பிரான்ஸால் குட்டிச் சுவராக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தைச் கட்டியெழுப்புவது எளிய காரியமல்ல. சோஷலிச முனைப்புள்ள தேசியவாதியான பென் பெல்லாவால் நாட்டின் பொருளாதாரம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. ஏனெனின் அல்ஜீரியா, பிற மூன்றாமுலக நாடுகள் போன்று, பெற்ற சுதந்திரம் முழுமையானதல்ல. ஏகாதிபத்தியம் உலகச் சந்தை மூலமும் தனது மற்ற நவகொலனித்துவ நடைமுறைகள் மூலமும் மூன்றாமுலக நாடுகளின் பொருளாதாரத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இன்னமும் வைத்திருக்கிறது.

தலைவலியை மாற்றத் தொப்பியை மாற்றுவது போல பென் பெல்லாவை அகற்றி விட்டு ஹூஆரி பூமெடியனைத் தலைவராக்கினார்கள். ஆனால் எஃவ். என்.எல் ஒரு மக்கள் சக்தியாக விரிவடையத் தவறியது. அதன் தலைமை தனது அரசியல் அதிகாரத்தைத் தக்க வைக்க விரும்பும் ஒரு புதிய அதிகார வர்க்கமாகவும் தேசிய முதலாளித்துத்தின் பிரதிநிதியாகவுமே செயற்பட்டது. என்றாலும் 60களிலும் 70களின் நடுப்பகுதிவரையிலும் அல்ஜீரியா அரசாங்கம் அணி சேரா நாடுகளின் ஏகாபத்திய விரோத அணியில் ஒரு முக்கிய பங்கு வகித்தது. இஸ்ரேலின் ஸியோனிஸ அடக்குமுறைக்கு எதிரான பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதிலும் அது ஆக்கபூர்வமான பங்கை வழங்கியது. 1970களின் பின் உலக அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் அல்ஜீரியாவிலும் தமது பாதிப்பைக் காட்டின. தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களது ஏகாபத்திய எதிர்ப்புணர்வு மழுங்குண்டதோடு ஏகாதிபத்தியத்திற்குப் பணிந்தோ அதனுடன் ஒத்துழைத்தோ தமது அரசியல் அதிகாரத்தைப் பேணும் போக்கு வளர்ச்சி பெற்றது.

சாட்லி பெஞ்சேடிட் தலைமையின் கீழ் அல்ஜீரியாவின் அரசாங்கம் குறிப்பாக 1980களின் பின்பாதியில் மெல்ல மெல்ல ஏகாதிபத்தியவாதிகளது ஆணைக்குப்



அல்ஜீரியா ஆட்சியாளர்களை ஊழல் மிக்கவர்களாகவும் ஜனநாயக மறுப்பாளர்களாகவும் மக்களது நலன்கள் பற்றிய அக்கறை அற்றோராகவும் காண்பவர்களது தொகை அந்த நாட்டில் அதிகமாகியது.

மக்களைப் பொறுத்தளவில் பென் பெல்லாவும் பூமெடியனும் எவ்வளவு குறைகளையுடையோராக இருந்தாலும் ஊழலற்ற தேச பக்தர்களாகவே இருந்தார்கள். 1970களில் நடுப்பகுதியில் எண்ணெய் விலை அதிகரிப்பின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நலன்களில் ஒன்று இயற்கை வாயுவை ஏராளமான அளவிற் கொண்ட அல்ஜீரியாவுக்கு ஏற்பட்ட வருமானத்தின் அதிகரிப்பாகும். ஆயினும் இதன் பயன்களை ஒரு நீண்ட காலக் கண்ணோட்டத்தில் பயன்படுத்த அரசாங்கம் தவறி விட்டது. 1986ல் எண்ணெய் விலையில் ஏற்பட்ட சரிவின் விளைவாக அரசாங்கம் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியது. இந்தச் சுமையை அதிகமாக அனுபவித்தோர் அல்ஜீரியாவின் ஏழைகளே. ஆளுங் கட்சியில் ஏற்பட்ட பிளவுகளும் மக்களின் கஷ்டங்களும் 1988ல் அரசாங்க விரோத ஆர்ப்பாட்டங்கட்கு வழிகோலின. இதற்கு முகங்கொடுங்கும் வழியில் அரசாங்கம் சில அரசியல் சீர்திருத்தங்களை முன்வைத்தது. இவற்றின் நோக்கம் ஆளுங்கட்சியின் அதிகாரத்தைக் குறைந்தது ஜனநாயகத்தைப் பரவலாக்குவது அல்ல. மாறாக ராணுவத்தின் அதிகாரத்தை மேலும் பலப்படுத்தி அதிகாரபீடத்தில் உள்ள சிலரது நலன்களைக் காப்பது மட்டுமே.

இந்த அல்ஜீரியா அதிகார வர்க்கம் 1962ல் விடுதலை வென்றெடுத்த தலைமையிலிருந்து மிகவும்

அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காகத் தன் அயலிலிருந்த பிற்போக்கு அரசாங்கங்களுடன் தன்னை நெருக்கமாகப் பிணைத்துக் கொண்டது. மக்களது கோபமோ மாறவில்லை. பொருளாதார நெருக்கடி தளரவில்லை. 1992ல் நெருக்கடி மேலும் உக்கிரமான போது பெஞ்ஜேடிட் ஆட்சி சிறிது பணிந்து நியாயமான தேர்தல்களை நடத்த ஒப்புக்கொண்டது.

தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணப்படும் போது எஃப்.ஐ.எஸ். எனப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சி வெற்றி பெறக் கூடும் என அறிந்த அரசாங்கம் தேர்தலை ரத்துச் செய்தது. மீண்டும் ராணுவ அடக்குமுறை ஆட்சி நிறுவப்பட்டது. இந்த ஜனநாயகக் கொலையைச் சகல ஏகாதிபத்திய நாடுகளும் அங்கீகரித்து ராணுவச் சர்வாதிகட்குத் தமது ஆதரவை வழங்கினர்.

இதன் விளைவாக, இஸ்லாமிய அடிப்படைவாதிகளது பயங்கரவாதப் போர் உருவானது. கடந்த இரண்டு ஆண்டுகளாக வாரமொன்றுக்கு நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஒரு பகுதியினர் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எனச் சந்தேகிக்கப்படடு அரசபடைகளாலும், மறு பகுதியினர் அரசபடையினர், அரசின் எடுபிடிகள் எனக் கருதப்பட்டு இஸ்லாமிய அடிப்படைவாதிகளாலும் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் ஆதரவற்ற அரசாங்கம் இன்று இஸ்லாமிய அடிப்படைவாத எதிரணியுடன் பேச்சுவார்த்தை நடத்த இணங்கும் சாடை தோன்றியுள்ளது. எனினும் தீர்வு இன்னமும் தொலைவிலேயே உள்ளது.

இந்த நிலையில் அல்ஜீரியாவின் இஸ்லாமிய அடிப்படைவாதிகளது நிலைப்பாடு பற்றியும் மக்களிடையே அவர்களது செல்வாக்குப் பற்றியும் சிறிது குறிப்பிட்டாக வேண்டும்.

குறுகிய தேசியவாதத்தினளவுக்கு மதத் தீவிரமாதமும் ஜனநாயக விரோதப் பண்புகளை உடையது. சகிப்புத் தன்மை, பிற சமுதாயங்களுடன் சமத்துவமான உறவு என்ற பண்புகளை இரண்டு விதமான போக்குக்களிலும் காணமுடியாது.

அதைவிட, அல்ஜீரியாவின் சர்வாதிகார ஆட்சியும் அடக்குமுறையும் நியாயமான ஒரு தேர்தல் முடிவை ரத்துச் செய்த அநியாயமும் இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளை வன்முறையை நோக்கி உந்தி விட்டுள்ளன. தமது நியாயமான கோரிக்கட்கு ஆதரவாகப் போராடும் அதே வேளை, இந்தச் தீவிர மதவாதிகள் மதத்தை விளங்கிக் கொள்ளவும் நடைமுறையில் வியாக்கியானம் செய்யவும் பிற முஸ்லீம்கட்கு உள்ள உரிமையை மறுக்கிறார்கள். இஸ்லாம் பற்றிய தமது விளக்கமே எல்லாக் காலங்கட்கும் இடங்கட்கும் பொருந்துவது என அவர்கள் பிடிவாதமாக இருப்பதால் அவர்களது அரசியல் அதிகாரம் பிறரின் ஜனநாயக உரிமைகளின் மறுப்பாக முடியும் என்ற அச்சம் தவறானதல்ல.

அனந்தன்

→ 10

படிப்பகம்

www.padippakam.com



## அமெரிக்க சொர்க்கபுரியில் கைதிகளின் எண்ணிக்கை

## 10 இலட்சம்

'ஒரு நாட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் எண்ணிக்கையும் அவர்கள் புரிந்த குற்றங்களின் தன்மைகளையும் கொண்டு அந்நாட்டின் சமூகப் பெறுமானத்தை மதிப்பீடு செய்து கொள்ள முடியும் என்று ஒரு மேலைத்தேய சமூகத் துறை ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார். அண்மையில் அமெரிக்காவில் இருந்து வெளிப்பட்ட சில விபரச் செய்திகளைப் பார்த்த போது மேற்கூறிய ஆய்வாளரின் கூற்று எவ்வளவு உண்மை என்பதை உணர முடிந்தது. அமெரிக்காவில் வருடா வருடம் குற்றச் செயல்கள் அதிகரித்தவாறு செய்வதாகவும் 1993ம் ஆண்டில் குற்றச் செயல்கள் ஆறு சதவீதமாக அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. அதாவது ஆண்டு ஒன்றுக்கு நான்கு கோடி நாற்பது லட்சம் குற்றங்கள் அமெரிக்காவில் புரியப்படுகின்றன என்று விபரங்கள் கூறுகின்றன. அதே வேளை அமெரிக்கா முழுவதிலும் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட கைதிகள் பல்வேறு குற்றச் செயல்களுக்காக சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன. கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்முறைகள், போதை வஸ்துப் பாவனை, மோசடிகள், ஏமாற்றுக்கள், லஞ்ச, ஊழல் போன்ற பல்வகைக் குற்றங்கள் அமெரிக்கா வில் தாராளமாக இருந்து வருகின்றன.

மேற்கூறிய விபரங்கள் பலருக்கு ஆச்சரியத்தை அளிக்கக் கூடும். ஏனெனில் உலக நாடுகளுக்கும் மக்களுக்கும் அமெரிக்கா ஒரு சொர்க்கபுரியாகக் காட்டப்படுவதுடன் ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை. சமூக ஒழுக்கங்கள் போன்றன பற்றியும் அந்நாட்டின் தொடர்பு சாதனங்கள் இடையறாது போதித்துக் கொண்டே இருக்கின்றன. வெறும் போதனையுடன் நின்றுவிடாது நாடுகளின் சமூக அரசியல் பொருளாதார கலாச்சாரத்துறைகள் அனைத்திலும் தலையீடுகள் செய்வதற்கும் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை போன்றவற்றையே கவசங்களாகவும் அணிந்து செல்கின்றது.

உலகுக்கு உபதேசம் நடாத்தும் அமெரிக்க தனது நாட்டில் கோடிக் கணக்கில் குற்றங்கள் புரியப்படுவதற்கும் அதன் காரண ளைக் கொண்டிருப்பதற்கும் என்ன காரணத்தைக் கூறப் போகின்றது. நமது நாட்டில் சிலர் கூறுவது போல் மத உணர்ச்சி அற்று அருகி வருவதாலும் அப்போதனைகளைக் கைவிட்டதாலும் தான் சமூகக் சீரழிவுகளும் குற்றங்களும் அதிகரித்துள்ளன என்று அமெரிக்கா வாதிடப் போகிறதா அல்லது வேறு தனிநபர்கள் மீதான குற்றச் சாட்டுதல்களாக முன்வைக்கப் போகின்றதா?

எத்தகைய சாக்குப் போக்கு கூறினாலும் அந்த நாட்டின் குற்றச் செயல் அதிகரிப்புக்கும், கைதிகளின் பெருகி வரும் தொகைக்கும் அடிப்படைக் காரணம் இந்த நாட்டின் சமூக அமைப்புத் தான் என்பது புரிந்து கொள்ளப்படப் வேண்டும். தனிநபர் சுதந்திரம், தனிநபர் முன்னேற்றம் அதற்கு போட்டிச் சந்தை அமைப்பின் விஸ்தரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதலாளித்துவ சமூக அமைப்பின் தவிர்க்க முடியாத விளைவாகவே குற்றச் செயல்களும் குற்றவாளிகளும் உருவாகின்றனர். உழைப்பிற்கு ஏற்ற ஊதியமின்மை, வறுமை, நோய், வேலை இன்மை, கலாச்சாரச் சீரழிவுகள் மக்களை இளம் தலைமுறையினரை விரக்திக்கும் வெறுப்புக்கும் ஆளாக்கி வருகின்றன. அதனால் போதைவஸ்து பாவனையிலும் பலாத்காரச் செயல்களிலும் மக்கள் குறிப்பாக இளம் தலைமுறையினர் சிக்கிச் கொள்கின்றனர். எனவே மனிதர்களைக் குற்றச் செயல்களில் இறங்க வைப்பதும் குற்றவாளிகளாக்குவதுடன் கைதிகளாக்கிக் கொள்வதும் சமுதாயச் சூழலே அன்றி அவர்களின் தனிமனித விருப்பு வெறுப்புக்கள் அல்ல. அமெரிக்காவில் குற்றச் செயல்களும் கைதிகளும் வருடாவருடம் அதிகரித்து வருகின்றமைக்குக் காரணம் அமெரிக்காவின் முதலாளித்துவ ஏகாதிபத்திய சமூக அமைப்பின் தன்மையேயாகும். அத்தகைய அமைப்பு நீடிக்கும் வரை அமெரிக்காவின் குற்றச் செயல்களைத் தடுக்கவோ அன்றி கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவோ முடியாது என்பதே அப்பட்டமான உண்மையாகும்.



## உலக சரித்திரத்தில் உளவு நிறுவனங்கள்

மனித வரலாற்றில் உளவறியும் தந்திரோபாயங்களும், அதன் தாக்கங்களும், மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரையுள்ள மறைமுக செயல்பாடுகளாம். ஆனால் பாரிய மாற்றங்களின் காரணிகளாம்.

சமுதாயங்களுக்கிடையேயுள்ள போட்டி, பொறாமை, நம்பிக்கையின்மை போன்ற கிருமிகளே உளவுத் தொழிலின் உயிர் நாடிகள்.

உளவுத் தொழில் உலகின் இரண்டாவது பாரம்பரிய தொழிலெனலாம். ஒரு விதத்தில், தனக்கென விதிமுறைகளையும். நடப்புமுறைகளையும் கொண்ட ஒரு செயற்பாடே உளவறியும் வேலை. தனிப்பட்டவர்களிலிருந்து ஸ்தாபனரீதியாக இயங்கும் இந்த ''கலை'' சமுதாயங்களிலிலும் நாடுகளிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது நடைமுறையில் உள்ள ஸ்தாபனங்களின் பட்டியலில் சில:

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய உளவறியும் ஸ்தாபனம் | CIA | அமெரிக்கா |
| 2. | சமஷ்டி துப்பறியும் நிறுவனம் | FIB | அமெரிக்கா |
| 3. | ஆராய்ச்சி, ஆய்வு இலாகா | RAW | இந்தியா |
| 4. | ரஷ்ய உளவறியும் நிறுவனம் | KGB | ரஷ்யா |
| 5. | பிரித்தானிய இயக்கங்கள் | MI5, MI6 | பிரிட்டன் |
| 6. | இஸ்ரேல் இரகசிய சேவை | MOSSAD | இஸ்ரேல் |
| 7. | கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி | HVA | ஜேர்மனி |
| 8. | பிரான்ஸ் உளவு சேவை | D.S.G.E | பிரான்ஸ் |
| 9. | அவுஸ்ரேலிய இரகசிய சேவைப்படை | ASIO | அவுஸ்ரேலியா |
| 10. | ஈரானிய இரகசியப் படை | SAVAK | ஈரான் |
| 11. | மத்திய, வெளித்தொடர்பு இலாகா | Contral External liasion Deparment | சீனா |
| 12. | ஜப்பானிய உளவறியும் ஸ்தாபனங்கள் | NAVAl Intelligence Bureau | ஜப்பான் |
| 13. | அரசு பாதுகாப்பு நிறுவனம் | BOSS(Bureau of state secuits) | தென் ஆபிரிக்கா |
| 14. | இரகசிய சேவை இலாகா | DGI | கியூபா |
| 15. | ''செவிமடுக்கும் கம்பம்'' ''The Listening Post | AL MUKHARA-BAT | ஈராக் |
| 16. | பாதுகாப்பு மதிநுட்ப சேவை | SIS | கனடா |
| 17. | இரகசிய உளவாய்வு நிறுவனம் | CESID | ஸ்பானியா |
| 18. | பொதுத் தகவல் சேவை | MUKHABARAT EL-AAm | எகிப்து |

இப்பட்டியின் எண்ணிக்கை உலக நாடுகளின் எண்ணிக்கைக்கு ஒத்தது. சிறிய, வறிய நாடுகளின் நிறுவனங்கள் அநேகமாக உள்ளூர் நடவடிக்கைகளுடன் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளன.

சரித்திரக் குறிப்பேடுகளில் கி.மு. 2000 ஆண்டளவில் மத்தியதரை பாலைவனங்களில் உலாவிய ''பாணும்'' எனும் படைத்தலைவன் ''மாரி'' என்னும் அரசனுக்கனுப்பிய இரகசிய தகவல் களிமண் ஏட்டில் இன்றும் பாதுகாப்பாக உள்ளது. (BANNUM TO MARI) இதில் எதிரிகளின் நடமாட்டம் வரைபடங்களாலும், எழுத்துக்களாலும் விவரிக்கப்பட்டுள்ளது.

சீன அறிஞர் SUN TZU என்பவர் கி.மு.4ம் (நாலாம்) நூற்றாண்டில் வாழ்ந்து ''போர்க்கலை'' எனும் படைப்பை உலகிற்கு அளித்தவர். அதில், அடிப்படையாக ''தன்னையறிந்து அதேயளவு எதிரியையும் அறிந்தவன் தோல்வி அடையவே மாட்டான்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சரித்திரத்தில் உளவறியும் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை:

1) கி.மு 1350: துடன்கமுன் (KING TUTANKAMUN) எனும் எகிப்திய அரசனின் விதவை ராணி அன்கஸ் -என்- அமுன் அனுப்பிய விவாக அழைப்பிதழும் அதன் பின் விளைவுகளும்.

2) PROPHET MOSES (மோஸஸ்) உடனிருந்த 12 பயிற்சி பெற்ற உளவாளிகள்.

3) சாணக்கியரின் ''விஷக்கன்னிகள்'' குப்த சரித்திரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்.

4) ஹனிபாலின் (HANNIBAL) தோல்விக்கு வழிவகுத்த உளவாளிகள்

5) பேரரசர் அலக்சான்டரின் இந்தியப் படையெடுப்பின் முடிவு. இங்கு ''போர்வீரரின் கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள் பற்றி உளவாளிகள் அளித்த தகவல்களே, அலேக்ஸாண்டரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டியது.

6) அக்பர், ஜங்கிஸ் கான் போன்றோரின் உளவுப் படை. இதே போல், எந்தப் பேர்ரசை எடுத்தாலும் உளவுப் படை ஒரு அங்கமாக திகழ்ந்துள்ளது.

7) அண்மைச் சரித்திரத்தில் "MATA HARI" "CHISTING KEELER" போன்றோரின் பங்குகள்.

உளவுத் தொழில் அகராதியில் சில வார்த்தைகள்:

| | |
|---|---|
| AGENT: (முகவர்): | இரகசிய தகவல் சேர்ப்பவரும், நடவடிக்கைகளில் ஈடுபடுபவரும் |
| AGENT OF INFLUENCE: | பொதுசன அபிப்பிராயங்களை திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் |
| AGENT PROVOCATEUR: | மக்கள் கிளர்ச்சிகளையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும் தூண்டுபவர் |
| ASSET : | வெளிநாட்டு மண்ணில் உள்ள ஏஜன்ட். |
| BAGMAN:- : | லஞ்ச விவகாரங்களை நெறிப்படுத்துபவர் |
| BLACK-BAG JOBS : | லஞ்ச பணவிவகாரம் மூலம் காரியங்களை சாதிப்பது. |
| BLOWN: : | ஏஜன்ட் அல்லது ஸ்தாபனம் பிடிபடுவது |
| BRAINWASH : | மனவியல்ரீதியான மாற்றங்களை உருவாக்கல் |
| BUGGIN : | தொடர்பு சாதனங்களை ஒற்றுக்கேட்டல். |
| CHECKIST: | மறுபெயர் |
| CYPHER: | குறிப்பு மொழியில் (CODE) உள்ள செய்தி |
| CRYPTOLOGY: | |
| THE COMPANY: | அமெரிக்காவின் CIA நிறுவனம் |
| COUSINS: | ஒரே நாட்டின் வெவ்வேறு ஸ்தாபனங்கள் |
| DEFECTOR: | எதிரிகளுடன் அல்லது வேறு நாட்டுடன் இணைபவர் |
| DISINFORMATION: | பொய்யான, கட்டுக்கதைகளை எதிரிக்கு புகுத்துதல் |
| DOUBLE AGENT: | இரண்டு முரணான ஸ்தாபனங்களுக்கோ, நாடுகளுக்கோ வேலை செய்பவர். |
| DROP | இரகசிய தகவல்களை வைக்குமிடம் |
| THE FARM: | ஒற்றர்களை பயிற்றுவிக்கும் முகாம்கள் |
| HONEY TRAP: | எதிரிகளை, எதிரி உளவாளிகளை பாலியல் நடவடிக்கைகள் மூலம் மடக்குதல் |
| ILLNESS: | கைது செய்தல் |
| LINE "X": | விஞ்ஞானரீதியான உளவு. |
| MUSIC BOX: | வானொலி மூலம் அஞ்சல் |
| WET JOB: | கொலைகள் சம்பந்தப்படும் உளவு நடவடிக்கை |
| ELIMINATION: | உயிரிழப்பு |

முதலாவது "உளவுத் தொழில் நெறிக்கோவை" (Intelligence Mannual) பிரிகேடியர் டேவிட் கண்டர்ஸனால் 18ம் நூற்றாண்டிலேயே வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# "புரண்ட்லைனின்" பத்திரிகா தர்மம்



(எஸ். ஜெயரட்ணம்)

கார்த்திகேயன் தலைமையிலான இந்தியப் புலனாய்வு குழுவினரின் வருகை இனப் பிரச்சினை தீர்வுக்கான இலங்கை அரசின் சமாதான முயற்சிகள் குழப்பப்படலாம் என்று இலங்கை மக்கள் ஐயம் கொண்டிருப்பதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இது பற்றிக் கடந்த 'புதிய பூமி'யில் செய்தி வெளியிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தொட்டலங்க குண்டுவெடிப்பு பற்றி புலனாய்வு செய்ய இந்திய புலனாய்வுக் குழுவினர் இங்கு வருவதை இலங்கை மக்களின் பெரும்பாலானோர் விரும்பவில்லை என்பதை இந்திய அரசிற்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிக்கை செய்துள்ளதாக இந்திய தூதரகத்துடன் நெருங்கிய தொடர்புடைய பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 'புதியபூமி'யின் செய்தி பற்றியும் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளிலும் தமிழ் மக்களிடையே நிலவும் அபிப்பிராயத்திலுமிருந்தும் பார்க்கின்ற போது காமினி திஸாநாயக்கவின் மறைவு இலங்கை மக்கள் மத்தியில் அனுதாபத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெரிய வருவதாக இந்தியத் தூதரகம் அறிக்கை செய்துள்ளது.

இந் நிலையில் காமினியின் கொலை விசாரணையில் இந்தியா தலையிடுவது இலங்கை மக்களிடம் குறிப்பாக தமிழ் மக்களிடம் மேலும் இந்திய அரசாங்கத்தின் மீதான வெறுப்பை அதிகரிக்கச் செய்யும் என்றும் அறிக்கை செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அதனாலேயே தொட்டலங்க குண்டு வெடிப்பு பற்றி புலனாய்வை நடத்த இந்திய குழுவினரை இங்கு அனுப்ப இந்திய அரசாங்கம் தயக்கம் காட்டுவதாக தெரிகிறது.

இருந்த போதும் இந்திய புலனாய்வு குழுவினரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்பதில் சென்னையிலிருந்து வெளிவரும் ஹிந்து - புரண்ட்லைன் சஞ்சிகைகள் இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருவதாக அறிய முடிகிறது.

இந்திய புலனாய்வு குழுவினரை இலங்கைக்கு அனுப்பி வைக்க இலங்கை அரசாங்கத்தின் அழைப்பையே இந்திய அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக 'ஹிந்து' செய்தி வெளியிட்டிருந்தது. அத்துடன் இலங்கைக்கு அழைக்க வேண்டும் எனதிருமதி காமினி திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ள புலனாய்வு குழுவினரில் ஒருவரும் ராஜீவ் காந்தி கொலை பற்றி புலனாய்வு செய்தவருமான கலாநிதி சந்திரசேகரனின் தொட்டலங்க குண்டு வெடிப்பு பற்றிய அபிப்பிராயத்தையும் ஹிந்து வெளியிட்டிருந்தது.

''பெண் தற்கொலையாளியே தொட்டலங்க குண்டுவெடிப்புக்கு பொறுப்பு. அக் குண்டு ஒரு கிலோ வெடிமருந்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. அக்குண்டு வெடிப்பால் 20மீற்றர் சுற்று வட்டாரத்தில் அழிவை ஏற்படுத்த முடியும்'' என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்ததாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. தொட்டலங்கவுக்கு வந்து புலனாய்வை செய்யாமலே அவர் எடுத்த முடிவின் நோக்கம் தெளிவாகிறதல்லவா.

சென்னையிலிருந்து வெளிவரும் புரண்ட் லைன் சஞ்சிகையின் நவம்பர் 18ம் திகதி இதழில் விடுதலைப் புலிகளே தொட்டலங்க குண்டு வெடிப்பை செய்தனர் என்று செய்திகளும், கட்டுரைகளும், படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. SRILANKA'S SHOCK. THE LTTE AT WORK AGAIN (இலங்கையின் அதிர்ச்சி மீண்டும் எல்.ரீ.ரீ.ஈ. அதனது வேலையில்) என்ற தலைப்பில் வீ.ஜயந் என்பவர் கட்டுரை எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள A DRY RUNஎன்ற தலைப்பிலான இன்னொரு கட்டுரைக்கு ஆதாரம் காட்டுவது போன்று 6 படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை மருதானையில் நடைபெற்ற காமினியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் படம். அவற்றை இலங்கைப் பத்திரிகைகளும் வெளியிட்டன.

ஆனால் அப்படங்களில் வட்டம் அடையாளமிட்டு காட்டப்படும் ஒரு பெண்ணை எல்.ரீ.ரீ.ஈ தற்கொலை கொலையாளி என்று 'புரண்ட் லைன்'இல் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

A DRY RUN என்ற கட்டுரையுடன் வெளியிடப்பட்டுள்ள ஐந்து படங்களுக்கு பின்வருமாறு குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

படம் 1. காமினி மருதானை கூட்டத்திற்கு வருகிறார்.

படம் 2. கூட்டத்திலுள்ள ஏனையோர் கூட்டத்தில் லயித்து கைதட்டிக் கொண்டிருக்கும் போது (வட்ட அடையாளத்திற்குள்ளிருக்கும்) எல்.ரீ.ரீ.ஈ பெண் தற்கொலை கொலையாளி மட்டும் நோக்கத்தை நிறைவேற்ற அமர்ந்திருக்கிறாள்.

படம் 3. பெண் கொலையாளி சிரிக்கிறாள்.

படம் 4. கூட்டத்தின் உச்ச நிலையில் அவள் கைதட்டுகிறாள்.

படம் 5. கொலை செய்ய எண்ணம் கொண்டுள்ள அவளது முகம்.

படம் 6. அவளுடைய தோளில் வந்துவிழும் அவளது தலைமயிரை பின்னால் தள்ளி விட தலையை ஆட்டிக் கொள்கிறாள். இது குண்டை வெடிக்க வைப்பதற்கான சமிஞ்ஞையா?

இலங்கை சி.ஐ.டி அந்தப் படங்களை தேசிய பத்திரிகைகளில் வெளியிட்ட போதும் அந்தப் படங்களில் இருக்கும் பெண்ணே கொலையாளி என்றோ, எல்.ரீ.ரீ.ஈ தற்கொலை யாளி என்றோ குறிப்பு எழுதப்படவில்லை. அந்தப் படங்களை பிரசுரித்து கொலைச் சந்தேக நபரை கண்டுபிடிக்க பொதுமக்களிடமிருந்து உதவியை சி.ஐ.டி கோரியிருந்தது.

ஆனால், எவ்வித அடிப்படையுமின்றி 'புரண்ட் லைன்' சஞ்சிகை அப்படங்களில் இருந்த பெண்ணை எல்.ரீ.ரீ.ஈ கொலையாளி என்று அடையாளம் கண்டு விட்டது போல் தரம் குறைந்த நிலையில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

கொலைச் சம்பவம் அல்லது ஒரு குற்றச் சம்பவம் பற்றி செய்தி வெளியிடும் போது கடைப்பிடிக்க வேண்டிய பத்திரிகா தர்மத்தை புரண்ட் லைன்' மீறி விட்டது. புலன் விசாரணைகள் முடிவடைந்து வழக்கு விசாரணைகளும் முடிந்து ஒருவர் குற்றவாளி என்று தீர்க்கப்படும் வரை அவரை குற்றவாளி என்று அழைக்கவோ, எழுதவோ முடியாது. குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்படும் வரை வழக்கில் குற்றம் சாட்டப்படக்கூடிய அல்லது குற்றம் சாட்டப்பட்டவரை சந்தேக நபர் என்றே எழுத வேண்டும்.

அதனை மீறி கொலையாளி, குற்றவாளி என்று எழுதுவது பத்திரிகா தர்மத்தை மீறுவது மட்டுமன்றி சம்பந்தப்பட்ட நபரின் அடிப்படை உரிமைகளையும் மீறுவதுடன் அவரின் மானத்திற்கு நஷ்டமிழைப்பதுமாகும்.

இலங்கையின் குற்றவியல் சட்டத்தில் மட்டுமன்றி இந்திய குற்றவியல் சட்டத்திலும் நிரபராதி எனும் ஊகம் (PRESUMPTION OF INNOCENCE) என்பது மிகவும் அடிப்படையாக இருக்கிறது அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதில் அரசியலமைப்பிலும் அவ் விடயம் முக்கியம் பெறுகிறது. குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை ஒருவர் நிரபராதியே என்பதனையே அது குறிக்கிறது.

தொட்டலங்கவில் குண்டு வெடித்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு தலை ஒரு பெண்ணின் தலை என்று அறியப்பட்டுள்ளதாக சி.ஐ.டி விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

அப் படங்களில் இருக்கும் ஒரு பெண்ணைக் காட்டி அவரை எல்.ரீ.ரீ.ஈ கொலையாளி என்று 'புரண்ட் லைன்'இல் எழுதப்பட்டுள்ள போதும் அப்பெண் நுவரெலியாவைச் சேர்ந்த பிரமிளா அருணாசலம் என்றும் அவர் உயிருடன் இருக்கிறார் என்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

கண்டெடுக்கப்பட்ட தலை அவரின் தலையல்ல என்பதும் அவர் எல்.ரீ.ரீ.ஈ அல்ல என்பதும் அவர் காமினியின் ஆதரவாளர், ஐ.தே. கட்சி அங்கத்தினர் என்பதும் 'புரண்ட் லைன்' அறிந்து கொள்ளத் தவறிய விடயங்களாகும்,

பிரமிளா அருணாசலம் என்பவர் தான் காமினியின் ஆதரவாளர் என்றும் அந்தப் படங்களில் காட்டப்பட்டுள்ள பெண் தானே என்றும் நுவரெலியா சி.ஐ.டியிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவரின் படம் பத்திரிகைகளில் வெளிவந்த பின்னர் நுவரெலியா மாநகரசபை மேயர் சட்டத்தரணி திலகா நளின் ஹேரத் அவரை நுவரெலியா சி.ஐ.டியிடம் ஆஜராக்கியுள்ளார்.

ஆஜராக்கிய போது மேயர் கொடுத்த வாக்குமூலத்தில் பிரமிளா ஐ.தே.கட்சி ஆதரவாளர் என்றும் ஏனைய ஆதரவாளர்களுடன் தானே அவரையும் கொழும்பு கூட்டங்களில் கலந்து கொள்ள அனுப்பி வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரமிளா அந்தப் படங்களில் அவருக்கு அருகில் இருப்போர் நுவரெலியாவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காட்டியுள்ளார்.

நுவரெலியா பம்பரகலையைச் சேர்ந்த் வாகன சாரதியான அருணாசலம் என்பவரின் மகளான பிரமிளா மூன்று நாள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவரை எல்.ரீ.ரீ.ஈ கொலையாளி என்று எழுதியதன் மூலம் பிரமிளா என்பவருக்கு மான நஷ்டம் ஏற்படுத்தியுள்ளதுடன் அவரின் மனித உரிமைகளையும் மீறியுள்ளது. பத்திரிகா தர்மத்தையும் மீறிவிட்டது.

'புரண்ட் லைன்' ஆசிரியர் என். ராம் காமினி திஸாநாயக்கவின் நெருங்கிய நண்பர் என்ற காரணத்திற்காக நிதானம் தவறி செய்திகளை பிரசுரிக்கலாமா?

## அல்ஜீரியாவும் ...

அல்ஜீரியாவில் பேர்பர் சிறுபான்மையினர் மத்தியில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் செல்வாக்கு மிகவும் குறைவானது. எனவே இவர்கள் மீதும் இஸ்லாமிய அடிப்படைவாதத் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்துள்ளனர். இவர்களை விட, அல்ஜீரியாவில் உள்ள சகல அந்நியரும் அடிப்படைவாதிகளால் பகைவர்களாகவே காணப்படுகின்றனர். அண்மையில் பல பிரெஞ்சுக்காரர்களும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் இருந்து வந்த தொழில் நிபுணர்களுங் கூட இவர்களாற் கொல்லப்பட்டுள்ளனர். இவை யாவுமே கண்டனத்துக்கு உரியவைதாம்.

முற் குறிப்பிட்ட குற்றங்கள் அனைத்தின் மத்தியிலும், இந்த விதமான மதத்தீவிர வாதம் எவ்வாறு மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளது என்பது முக்கியமான கேள்வி. மக்களால் வெறுக்கப்படும் ஒரு அரசிற்கு எதிராகச் செயற்படும் ஒரு வலிய சக்தி என்றளவில் இவர்களது செல்வாக்கு இயல்பான ஒன்றே. அரசாங்கப் படைகளின் கொடுமைகளின் பின்னணியில், மக்கள் மத்தியில் இவர்களால் தம் தவறுகளை ஓரளவுக்கு நியாயப்படுத்த முடியுமாகிறது. மக்களைப் பொறுத்தவரை அவர்கள் முன் உள்ள தெரிவுகளை இரண்டே. ஒன்று அடக்குமுறை அரசாங்கமும் அதன் ஊழல் மிக்க நிர்வாகமும் . மற்றது இதுவரை பரீட்சிக்கப்படாத ஒரு தீவிரவாத அரசியல், மதவாத சக்தி. மக்களுக்கு மூன்றாவது பாதை ஒன்று தேவை. ஆயினும் அதற்கு முன்பு மக்களது பிரதான எதிரியார் என்ற கேள்விக்குப் பதில் தேவைப்படுகிறது. இரண்டு ஆண்டுகள் முன்பு நடந்த தேர்தலில் வென்றவர்களுட்கு அரசாங்கம் அமைக்கும் உரிமை வழங்கப்படவோ புதிய நியாயமான தேர்தல் ஒன்றை நடத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டாமா என்ற கேள்வி எழுகிறது. அயல் நாடுகள், முக்கியமாக மேலை முதலாளித்துவ வல்லரசுகள், அல்ஜீரியாவில் தலையிடுவது சரியா என்ற கேள்வியும் எழுகிறது.

தீவிரமதவாதிகளால் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பது எனது நம்பிக்கை. ஆயினும் அந்த முடிவும் அல்ஜீரியாவின் எதிர்காலத்திற்கு நல்லது எது என்று கண்டறியும் உரிமையும் மக்களுடையதே அல்லாமல் எந்த ராணுவ ஆட்சியினுடையது மல்ல, ஏகாதிபத்தியவாதிகளதும் அல்ல. மக்களது தெரிவை மதித்து ஒரு தேர்தலை முறையாக நடத்தி விட்டுப் பதவி விலகுவதை விட அல்ஜீரியாவிற்கு நல்லதாக அதன் ராணுவ சர்வாதிகாரம் எதையுமே செய்ய முடியாது.

www.padippakam.com



## மனிதநேய ...

ஒவ்வொன்றும் எப்பவோ சொல்லப்பட்டு விட்டது'' என்று கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த றோமன் மகிழ்நெறி நாடகாசிரியர் டெரன்ஸ் என்பார் கூறினார். காலத்துக்குக் காலம் சொல்லப்படும் முறைமைகள் வேறுபடுகின்றனவே அன்றி, சொல்லும் விஷயம் ஒன்றாகத்தான் உள்ளது. கெட்டவன் தீயதைச் சொல்ல, நல்லவன் நல்லதைச் சொல்லுவான். சிலசமயம் இருவரும் ஒன்றையே சொல்லுவார்கள்; ஆனால் இருவேறு நோக்கத்திற்காக. கடவுள் உண்டு என்று இருசாராரும் சொல்வர். கடவுள் இல்லை என்று சொல்பவர்களிலும் இருசாராரும் உள்ளனர். கோயில் பூசை செய்பவன் கடவுள் சிலையை விற்பதும், கொள்ளையடித்த பணத்தில் கடவுட்சிலையொன்றை செய்வித்து கோயிலுக்குக் கொடுப்பதும் ஒன்றுதான். இதில் எது புதுமை, எது பழமை? இரண்டுமே வழமைதான். சரி, பிழை, உண்மை, பொய்; இந்த இரண்டும் எக்காலத்திலும் ஒன்றுதான். நடைமுறைகள் மாறுபடும் ஒழுக்கம் என்றும் ஒன்றுதான். அதாவது நல்லவை, கெட்டவை. நாம் என்ன நோக்கத்துக்காக ஒன்றைப் பயன்படுத்துகின்றோம் என்பதுதான் முக்கியம். நாட்டார் பாடல்கள் தேவார திருவாசகங்கள், பழமொழிகள், பலஸ்தீனக் கவிதைகள் பாரதியார் பாடல்கள் யாவும் எனக்கு ஒன்று போலத்தான் தெரிகின்றன. அவை எவற்றிலும் நான் கடவுளைத் தேடுவதில்லை; மக்களைத்தான் தேடுகின்றேன்; அவர்தம் அவலங்களை, அங்கலாய்ப்புகளை, எதிர்பார்ப்புகளை, இறுமாப்புகளை காண்கின்றேன். அவற்றின் மூலம் இவற்றையே வெளிக்காட்ட முனைகின்றேன். எமது பண்பாட்டின் மரபைப் புரிந்துகொண்டவர்கள் அதை நயக்கிறார்கள். புரியாதவர்கள் பழமை என்கிறார்கள். புதுமைகள் யாவும் பழமையின் மற்றொரு வடிவம், வகை எனவே எனக்கும் தெரிகிறது -மராமரத்தின் ஆணி வேரின் நுனிக்கும் உச்சிக் கொப்பிலுள்ள இலைத்துளிருக்குமிடையிலுள்ள தொடர்பு போல. இவை இரண்டும் வேறு வேறு பொருட்கள் போலத் தோன்றினாலும் ஒரு உறவு இருக்கிறதல்லவா? அந்த உறவு இரண்டையும் ஒன்றாக எண்ண இடம் தருவதில்லையா? இல்லை என்பவருக்கு இல்லை; உண்டென்பவருக்கு உண்டு. பழமையும் புதுமையும் அவ்வாறே.

***நாடக அரங்கக் கல்லூரியின் பிதாமகர் என்ற பெயர் தங்களுக்கு உண்டு. இது பற்றியும், அதன் வளர்ச்சியில் தாங்கள் காணும் நிறைவு பற்றியும் கூறமுடியுமா?***

நண்பர்கள் சிலர் இணைந்தே நாடக, அரங்கக் கல்லூரியினை ஆரம்பித்தோம். ➡ ஆ.தாஸீசியசின் பங்கும் பணியும் அதில் முக்கியமானது. பின்னர் கலாநிதி சி.மௌனகுருவின் பணி கணிசமானது. ஏனைய நண்பர்கள் இலைமறைகாயாக இருந்து கொண்டு, தமது பெயர் புகழுக்காக ஏங்காது, தொடர்ந்து இருந்து வருகிறார்கள். நட்பு, நம்பிக்கை இவையே அதன் யாப்பு விதிகள். இதில் இணைந்து நின்ற, நிற்கின்றஇளைஞர்களது பங்கும் பணியும் முக்கியமானது. அவர்கள் இதனிடமிருந்து பெற்றுக் கொண்டவை அதை விட முக்கியமானது. நாடகம் பற்றிக் கற்றுக் கொள்வதற்கு எதுவும் இல்லை; அது தானே வரும் என்ற நம்பிக்கையை அகற்றுவதற்காகவே இந் நிறுவனத்துக்கு ''நாடக, அரங்கக் கல்லூரி'' என்ற பெயரை வைத்தோம். 1978ல் பெரும் ''புதின''மாக இருந்த இப்பெயர் இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. பலர் நாடகத்தைப் பயில்கின்றனர். யாழ். பல்கலைக் கழகழகத்தில் ஒரு பாடநெறியாகியும் விட்டது. க.பொ.த. உயர்தர வகுப்பில் பல மாணவர்கள் பயில்கிறார்கள். வட இலங்கைச்சங்கீதசபை பரீட்சிக்கும் பாடநெறிகளில் ஒன்றாக உள்ளது. புதிய நாடக முறைமைகளை யாழ்ப்பாணத்தில் பரவலாக்க வேண்டுமென்பதும் எமது நோக்கமாக இருந்தது. இன்று அது குறிப்பிடக் கூடியளவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாடசாலைகளில் நாடகத்தின் முக்கியத்துவத்தை உணரச் செய்யுமுகமாக, நாம் ''சிறுவர் நாடகம்'' ''பாடசாலை நாடகம்'' என்பவற்றைப் பரவலாக்கியுள்ளோம். இவை யாவும் பலரது உழைப்பால் விளைந்தவை; விளைந்து கொண்டிருப்பவை. நாடகப் பட்டறைகளை நாம் இங்கு அறிமுகப்படுத்தி, இன்று அவை பலராலும் விரும்பி ஏற்கப்படும் ஒன்றாக உள்ளன. நாடக் அரங்கக் கல்லூரியின் பணி தன்னிச்சையானதல்ல! நீண்ட, நெடுங்காலமாக, வெவ்வேறு காலகட்டங்களிலும் நாடகக் கலையில் உண்மையோடு உழைத்த பலர் பதித்து வந்த தடத்தின் தொடர்ச்சியே இது. இப்பாதை இன்னும் பல தூரத்திற்கு அமைக்கப்பட வேண்டியுள்ளது. அது தொடர்ந்துபல இன்னல்களை எதிர் கொண்டு அமைக்கப்படும் என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கை நிறைவைத் தருகிறது. இடர்கள் எமக்குத் துணிவைத் தருகின்றன.

**தங்களது அடக்கமும் விளம்பரம் தேடாத வினயமும் தங்களது முழுமையான ஒளிவீச்சுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று கருதுகிறோம். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

தனிநபர் முக்கியமானவரல்ல; அவர் சார்ந்திருக்கும் நிறுவனம் கூட முக்கியமல்ல. அவரின், அந் நிறுவனத்தின் பணிகளே முக்கியம். அப் பணிகள் தேவையான விளம்பரத்தை தேடிக் கொள்ளும். எங்கள் சமூகத்தில் ஒரு சாபக்கேடு இருந்து வருகிறது. ஊரை ஏமாற்றிப் பிழைக்கின்ற எல்லாரும் நிறையப் பட்டங்களைச் சூட்டிக் கொள்கிறார்கள். இன்று சிலர் வேண்டி வைத்திருக்கின்ற பட்டங்களைப் பார்த்தால், ''எல்லாம் அறிபவர்'', ''எல்லாம் தெரிந்தவர்'' என்று கருதப்படும் கடவுளை விஞ்சியவர்களோ இவர்கள் என எண்ணத் தோன்றும். ''நான்'' என்ற அகங்காரத்தை ஒழிக்க உதவ வேண்டிய ஆலயங்கள் அகந்தையை ஊட்டும் பட்டங்களை அள்ளி, அள்ளிக் கொடுக்கின்றன. எங்கள் மனுசருக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஒருபுறம் தம்மையே ஆகுதியாக்கும் இளநெஞ்சங்களின் தியாகம்; மறுபுறம் விளம்பரம் நாடும் பழசுபட்ட மனங்களின் பட்டம், பதவி வேட்கை. எனக்குக் கிடைத்திருக்கும் ''ஒளி வீச்சு'' என் பணிகளின் தரத்தையும் அளவையும் விஞ்சியவை எனக் கருதி அஞ்சுகிறேன் நான். இதற்குத் தகுதியுடையவனாக்கிக் கொள்ள என்னால் முடியாது. எனது ஆற்றல், ஆற்றலின்மை பற்றி எனக்குத் தெரியுமென நினைக்கிறேன். எனக்குத் தெரியாதுபோனாலும் என் மனச்சாட்சிக்கு நிச்சயமாகத் தெரியும்.

**நல்ல கலைஞனாக இருப்பதிலும் பார்க்க முதலில் நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

நல்ல கலைஞனாக இருப்பதென்பது நல்ல மனிதனாக இருப்பதை விடச் சுலபமானது தான் நல்லவனாக இல்லாத ஒருவனுக்கு மக்களுக்கு உபதேசம் செய்யும் உரிமை கிடையாது. நல்லவனாக இருப்பதென்பது எல்லோர்க்கும் நல்லவனாக இருப்பதென்பதல்ல. எல்லோரும் 'நல்லவன்' என்று சொல்லிக் கொள்ளுமாறு நடப்பதல்ல. எல்லோரையும் திருப்திப்படுத்த முயல்பவன் எவரையுமே திருப்திப்படுத்த மாட்டான். அவன் ''படுகள்ளனாகவே'' இருப்பான். கலைஞர்கள் நேர்மையானவர்களாக இருக்க வேண்டியது அவசியம். இதனை, வேறுபல வினாக்களுக்கான விடைகளில் வற்புறுத்தியுள்ளேன்.

நன்றி: வெளிச்சம்.

## ஜனாதிபதி சந்திரிகா ..

இருப்பினும் இவை ஓர் ஆரம்ப கால சொற்களின் மீதான மதிப்பீடு மட்டுமே. அது முழுமையானதாகக் கொள்ள முடியாது. அவரது அடுத்து வரும் செயல்கள் தான் அவருக்கான உண்மையான மதிப்பீடாக இருக்க முடியும்.

இதில் அதீத கற்பனைகளுக்குள் வீழ்ந்து விடக் கூடாது. நினைத்த போது நினைத்தவை சகலவற்றையும் தந்துவிடும் கற்பகதருவாக திருமதி சந்திரிகாவை எதிர்

வழங்குவதற்கு வல்லமையற்றவர் என்ற முடிவுக்கு வருவதோ தவறான ஊகங்களாகவே அமைந்து விடும். இதற்குப் பதிலாக ஒருவரது சொற்களில் இருந்தல்ல; செயல்களில் இருந்தே அவரது சாதக பாதக அம்சங்களை மதிப்பிட்டுக் கொள்வது என்ற நியாயமான நிலைப்பாட்டினைக் கொண்ட முடிவுகளுக்கு வர வேண்டும்.

புதிய ஜனாதிபதியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் எவ்வழி செல்லத் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள் என்பதை முழுமையா

க் கண்டறிவதற்கு இன்னும் சிறிது காலம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது. நாட்டில் வீழ்த்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மீளமைப்புக்கு உதவக் கூடிய வகையில் இந்த ஆட்சிக்கு எதிரான முற்கற்பிதங்களை வழங்குவதை விட தவறுகளை இடித்துரைத்து சரியானவற்றை முன்னெடுக்க உதவுவதே இன்றைய சூழலில் சரியானதாகும்.

## தோட்டங்களில் இனவாதத் தாக்குதல் அதிகரிப்பு

பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றைத் தொடர்ந்து மலையக தோட்டப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் (சிங்கள) இனவாதக் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இன்னும் தொடர்ச்சியாக பல இனவாத தாக்குதல் தோட்டப்பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் இனவாத குண்டர்கள் பல வெறியாட்டங்களை பரவலாக செய்து வருகின்றனர். கண்டி பன்விலையில் ஊர்வலமாகச் சென்று தோட்டத் தொழிலாளர்களை தாக்கச் சென்ற கிராமவாசிகள் தாக்கப்பட்டனர். அதன் எதிரொலியாக கடைவிதிக்குச் சென்ற ஒரு தோட்டத் தொழிலாளியின் கால்கள் குண்டர்களால் துண்டிக்கப்பட்டன. கால் துண்டிக்கப்பட்ட தொழிலாளி அந்தக் காயத்தின் விளைவால் இறந்தார். நுவரெலியா ஹைபறஸ்டிலும் இதே மாதிரியாக இனவாதரீதியாக தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். உடமைகள் சேதமாக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு றப்பர் தோட்டங்களிலும் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பொதுத் தேர்தலை அடுத்து இங்கிரியவிலுள்ள 'களுபகன' தோட்டத்தின் தொழிலாளர்கள் சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர் என்று தன்னைக் காட்டிக் கொள்ளும் அமரே என்ற இனவாத குண்டனின் தலைமையிலான குழுவினால் தாக்கப்பட்டனர்.

நிவித்திகல 'அந்தன' தோட்ட தெல்வல டிவிசனைச் சேர்ந்த எம். சுப்பிரமணியம் என்ற தொழிலாளி அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். அவர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்கவில்லை என்று கூறியே அடித்துக் கொல்லப்பட்டு உள்ளார்.

தோட்டப் பகுதிகளில் அதிகமாக இனவாதக் குண்டர்களே 'ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களும், முக்கிய உறுப்பினர்களாகவும் இருந்து வருகின்றனர். அவர்களின் காடைத்தனத்தினாலும், 1970-77 காலகட்டத்தில் புரிந்த பெரிய அட்டகாசங்களினாலுமே சுதந்திரக் கட்சிக்கு அல்லது சுதந்திரக கட்சியின் தலைமையிலான கூட்டணிக்கு மலையகத்தில் ஆதரவில்லாமல் போனது. அவப்பேர் கிடைத்தது.

எனவே இன சமத்துவத்தை வலியுறுத்திப் பேசும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் அவர்களின் அங்கத்தினர்கள், ஆதரவாளர்கள் என்று கூறிக் கொண்டு இனவாத தாக்குதல்களை செய்துவரும் குண்டர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் என்றதும் 1970-77இல் தோட்டங்களில் புரிந்த குண்டர்களின் முகமே நினைவுக்கு வரும்.

1970-77இல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து வந்த சவால்கள் பெரிய தலையிடியாக இருந்தது நினைவிருக்கலாம்.

1979இலிருந்து தொடர்ந்து இடம்பெற்ற தேர்தல்களில் தோட்டத் தொழிலாளர்கள் யூ.என்.பிக்கு வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், அங்கத்தினர்கள், ஆதரவாளர்கள் என்போர் தோட்டங்களில் இதுந்து புரிந்த காடைத்தனம் பிரதான காரணமாகும். அத்துடன் தோட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டு தொழிலாளர்கள் இனவாதரீதியாக ஒதுக்கப்பட்டனர். அடக்கப்பட்டனர் என்பதும் காரணமாகும். எனவே ஒரு இனத்துவ அடையாளத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடம் புரியப்படும் இனவாத காடைத்தனம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக அவர்களை அணிதிரளச் செய்யும். அவர்கள் அரசியல்ரீதியாக பிழையான சக்திகளால் வழிநடத்தப்பட்டால் மலையகத்திலும் அமைதி குலைந்துவிடும்.

தேல்தல் காலகட்டத்தில் அதற்குப் பிறகு நடைபெற்றுள்ள வன்செயல்களை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ள போதும் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து அவர்கள் கொழும்புக்கு வந்து அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க முடியாது.

எனவே மலையகப் பகுதிகளில் தேர்தலுக்குப் பின்னர் இடம் பெற்ற வன்செயல்களை விசாரித்து குற்றவாளிகளை கண்டு பிடித்து தண்டிக்க விஷேட ஏற்பாடுகளை செய்ய வேண்டும். தோட்டங்களில் இனவாத சம்பவங்கள், நடைபெறாமல் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## சீனி விலை ...

தற்போது யசோதாவிடம் 1,40,000 மெற்றிக் தொன் சீனியும், ஆறுமுகத்திடம் 4000 மெற்றிக் தொன் சீனியும் கையிருப்பில் இருப்தாக அறியப்படுகிறது.

மேற்படி நான்கு வர்த்தகர்களிடம் இருக்கும் சீனி வர்த்தக ஏகபோகத்தை சிதைத்து சீனி வர்த்தகத்தை பரவலாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் சீனியின் விலையை குறைக்க முடியாது. அதனால் பொதுமக்களே பெரிதும் கஷ்டப்படுவர்.

சீனி வர்த்தகத்தை ஏனைய நிறுவனங்களும் மேற்கொள்ளக் கூடியளவிற்கு வர்த்தக சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தினால் ஒரு கிலோ சீனியை 20 ரூபாவிற்கு குறைவாக விற்க முடியும்.

அந்த நான்கு வர்த்தகர்களிடம் மட்டுமே சீனி கையிருப்பில் வைக்கப்டும் ஏகபோக வர்த்த சூழ்நிலை மாற வேண்டும். ஏனைய சீனி வர்த்தக நிறுவனங்களும் கையிருப்பில் வைத்திருக்க கடன் உட்பட பல ஊக்குவிப்புகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI புதிய பூமி


மட்டக்களப்பைச் சேர்ந்த பிறப்பு -இறப்பு விவாகப்பதிவாளர் கனகசபாபதி (74 வயது) இந்தியப் புலனாய்வு பிரிவினால் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

அவர் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் சுகவீனமடைந்ததால் சென்னை அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் எதிரியாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கனகசபாபதி இலங்கை பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு இந்திய புலனாய்வு -பிரிவினரால் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

''சார்க்'' நாடுகள் ஒப்பந்தத்தில் குற்றவாளிகள் கைமாற்றலில் இலங்கை கைச்சாத்திட்டிருந்த போதும் இலங்கை பிரஜை ஒருவர் இவ்வளவு இலகுவாக இந்திய புலனாய்வுப் பிரிவினரால் கூட்டிச் செல்லப்பட முடியுமா என்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ராஜீவ் காந்தியின் ஆட்சியின் காலத்தில் இந்தியாவிலிருந்த தமிழ் தீவிரவாத தலைவர்களை விசாரணைக்காக இலங்கையிடம் ஒப்படைக்கும்படி ஜே.ஆர் அரசாங்கம் பலமுறை கேட்டுக் கொண்ட போது ராஜீவ் காந்தி அரசாங்கம் செய்யவில்லை.

அதேபோன்று பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொலை தொடர்பாக இலங்கையில் கைது செய்யப்பட்டவர்களை விசாரிக்க இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை பிரேமதாஸ அரசாங்கம் நிராகரித்தது.

ஆனால் இந்திய புலனாய்வு பிரிவினர் இலங்கைக்கு வந்து இலங்கையில் கைது செய்யப்பட்டிருந்த பல தமிழ் தீவிரவாதிகளிடம் வாக்கு மூலங்களை பெற்று விசாரணைகளை செய்துள்ளனர். அது அனுமதிக்கப்பட்டது.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற பிறகு அதுவும் திருமதி சந்திரிகா ஜனாதிபதியான பின்பு எந்தவித சம்பிரதாய பூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல், இலங்கைப் பிரஜை ஒருவர் இவ்வளவு இலகுவாக இந்திய புலனாய்வு பிரிவினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

குற்றவாளிகளை பரிமாறிக் கொள்ளும் சர்வதேச அல்லது பிராந்திய ஒப்பந்தங்களில் அரசாங்கம் கைச்சாத்திட்ட போதும் அதனை நடைமுறைப்படுத்த உள்நாட்டில் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். குற்றவாளிகளை நாடு கடத்தும் அல்லது பரிமாறிக் கொள்ள உள்நாட்டில் (பாராளுமன்றத்தினால்) சட்டங்களாக்கப்பட வேண்டும். அத்துடன் அதனை நடைமுறைப்படுத்த ஒழுங்குவிதிகளும் ஆக்கப்பட வேண்டும். அந்த சட்டங்கள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் அடிப்படையிலேயே ஒரு நாட்டின் பிரஜையை இன்னொரு நாட்டின் வேண்டு

## எங்கே போய் முடியப்போகிறது?

கோளுக்கிணங்க அந்நாட்டிற்கு அனுப்ப முடியும். அரசாங்கம் அவ்வாறு ஒருவரை பிறநாட்டிற்கு அனுப்ப எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக (உயர் நீதிமன்றத்தில்) வழக்காடவும் முடியும்.

சார்க் ஒப்பந்தப்படி ஒரு பிரஜை இன்னொரு நாட்டிற்கு அனுப்ப விஷேட சட்டங்களோ, ஒழுங்கு விதிகளோ இல்லை. (இலங்கையில் நடைமுறையில் இருக்கும் ஒருவரை வெளிநாட்டிற்கு குற்றச் செயலொன்றுக்காக கையளிக்கும் சட்டம் விரிவாகவோ தெளிவாகவோ இல்லை. அது சார்க் உடன்பாட்டை உள்ளடக்க வில்லை)

அந்த நடைமுறைகளை கையாள்வதுடன் ஒரு பிரஜையை குற்றச் செயல் பற்றிய விசாரணைக்காக வெளிநாடொன்றுக்கு அனுப்ப முன்னர் அனுப்பப்பட உள்ளவருக்கு எதிராக குறிப்பிட்ட குற்றச் சாட்டிற்குரிய அடிப்படை இருக்கிறதா என்று பூர்வாக புலனாய்வுகளை நடத்தி உள்நாடு திருப்தியடைய வேண்டும்.

இந்தியா பெயர் குறித்து ஒரு பிரஜையைத் தரும்படி கேட்ட மாத்திரத்தில் எவ்வித நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் இலகுவாக இந்தியாவுக்கு அனுப்பி வைப்பது ஒரு பிரஜையின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். அது மட்டுமல்ல இலங்கையின் இறைமையில் அப்பட்டமாக செய்யப்பட்ட மீறலுமாகும்.

எந்த அடிப்படையுமின்றி, எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் கனகசபாபதி இந்திய புலனாய்வுப் பிரிவினருடன் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ராஜிவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்ட தம்பதிகள் என்று இந்தியா சந்தேகிப்பவர்களின் திருமணத்தை கனகசபாபதி பதிவு செய்துள்ளார் என்பதே அவருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டு என்று தெரியவருகிறது.

எந்தவித அடிப்படையுமின்றி பகிரங்கப்படுத்தாமல் அரசாங்கம் எப்படி அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. இந்த பிழையான ஆரம்பம் எங்கே போய் முடியப் போகிறது?

ராஜிவ் காந்தியின் கொலையில் சம்பந்தப்பட்டவர்களென இந்தியா பெயர் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன், பொட்டு அம்மான் உட்பட பலரை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என ஏற்கனவே இருந்த முன்னைய அரசாங்கத்திடம் கேட்டிருந்தது.

புதிய அரசாங்கத்திடமும் இந்திய அரசாங்கம் அந்த கோரிக்கையை முன்வைக்கும் என்று இந்திய வெளிவிவகார அதிகாரி புதிய ஜனாதிபதி பதவியேற்று சில தினங்களில் குறிப்பிட்டிருந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இது இவ்வாறிருக்க ராஜிவ காந்தி கொலை தொடர்பான விசாரணைகளுக்கு தகவல்களை திரட்டிக் கொடுப்பதில் இந்தியாவுக்கு ஒரு தமிழ் இயக்கம் நேரடியாக உதவி வருவதாக அறிய முடிகிறது. எதற்காக அவ்வியக்கம் இந்திய அரசிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை வாங்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புலி வேட்டையில் சிக்கிய சுவாமி



சுவாமி பிரேமானந்தா என்பவர் அண்மையில் தமிழ்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். திருச்சியில் சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் ஆச்சிரமத்தை நடத்தி வந்த சுவாமி பிரேமானந்தா மீது பெண்கள் மீது பாலியல் வன்முறை புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவரது ஆச்சிரமத்தில் தங்கியிருந்த இளம் பெண்கள் மீது பாலியல் வன்முறை புரிந்தார் என்றே அவர் முதலில் கைது செய்யப்பட்டார்.

ஆனால் இப்போது அவர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க நடவடிக்கைகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டு வலுப்பெற்று வருகிறது. இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளரான ரவி என்பவர் கொல்லப்பட்டு அவரது சடலம் ஆச்சிரம வளவில் புதைக்கப்பட்டது என்றும் புதைகுழி தற்போது தோண்டப்பட்டது என்றும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய அரசியலில் குறிப்பாக சர்வதேச தொடர்புகளில் இந்திய சுவாமிமாரின் பங்கு பெரியதாகும். அதில் சுவாமி பிரேமானந்தா வின் பங்கு எத்தகையது என்பது தெரியவில்லை.

சுவாமி பிரேமானந்தா மீது சுமத்தப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுக்களில் உண்மை பொய் எந்தளவு என்பது தெரியவில்லை. இவ்வித குற்றச்சாட்டுக்கள் இந்திய சுவாமிமார்களின் மீது சுமத்தப்படுவது இதுதான் முதற்தடவை இல்லை. இதில் பேர் போன ஆசாமிகள் சாமிகள் வேடத்தில் நிறையவே இருக்கிறார்கள். இத்தகையவர்களில் பலர் பெரிய இடத்து அரசியல் தலைவர்களின் அரவணைப்பில் தமது சாமித் தொழிலை நன்கு நடத்தி வருகிறார்கள் என்பது உண்மையே.

ஆனால் அண்மையில் கைது செய்யப்பட்ட பிரேமானந்தா சுவாமிக்கு எதிராக தற்போது புலிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இதற்கு உரம் சேர்ப்பது போன்று சுவாமி பிரேமானந்தா இலங்கையில் மாத்தளையில் பிறந்து வளர்ந்தவர் என்றும் கொழும்பு 'றொஸ்மீற் பிளேசில்' ஆச்சிரமம் ஒன்றை அமைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

அவர் புலிகளுடன் தொடர்பு கொண்டவர், புலிகளின் நடவடிக்கைகளுக்கு உதவியவர் என்பதில் எவ்வளவு உண்மை இருக்குமோ தெரியவில்லை.

ஆனால் இந்திய அரசியலில் குறிப்பாக தமிழ்நாட்டு அரசியலில் புலிகள் இயக்கத்தைக் காட்டி அரசியல் நடத்துவது நிரந்தர வியாதியாகி விட்டது. அநேகமாக அரசியல்வாதிகளுக்கு வயிற்று வலி வந்தாலும் அதற்கு காரணம் புலிகளே என்று கூறுவது வழமையாகி விட்டது.

இந்த சூழலில் இந்த சுவாமியின் கைதுக்குப் பின்னால் என்னென்ன காரணம் இருக்குமென்று கூற முடியாது. ஆனால் புலிகளுடன் தொடர்புடையவர் என்பதை நிலைநிறுத்த பாலியல் வன்முறை குற்றச்சாட்டின் பேரில் சுவாமி கைது செய்யப்பட்டார் என்ற செய்திதான் சிரிக்க வைக்கிறது.

## சீனி விலை 40/= ஆக அதிகரிக்கும் அபாயம்

சீனி விலை 35 ரூபா வரை அதிகரித்திருப்பதற்கு ஆறுமுகம், ஈஸ்வரன், டேசன்ஸ், யசோதா ஆகிய நான்கு சீனி வர்த்தகர்களே காரணம் என்று சந்தை வர்த்தக நிபுணர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஒரு கிலோ சீனி 24 ரூபாவிற்கு விற்கப்பட்டது. தேர்தல் முடிந்தவுடன் 35 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. சீனி வியாபாரத்தில் ஏகபோகம் கொண்டிருக்கும் ஆறுமுகம், ஈஸ்வரன், டேசன்ஸ், யசோதா ஆகிய நான்கு வர்த்தகர்களே சீனி இறக்குமதி, விலை, களஞ்சியப்படுத்தல் என்பவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

அரசாங்க சீனிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (ச.தொ.ச) ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலிருந்து சீனி இறக்குமதி வர்த்தகம் தனியார் வர்த்தகர்களிடம் திட்டமிட்டு ஐ.தே.கட்சி அரசாங்கம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

ச.தொ.ச, ஏனைய சீனி வர்த்தக நிறுவனங்களிடமிருக்கும் சீனியை மேற் குறிப்பிட்ட நான்கு வர்த்தகர்களும் விலை கொடுத்து வாங்கி விடுவதால் ச.தொ.சவிடமும் ஏனைய சீனி வர்த்தக நிறுவனங்களிலும் சீனி கையிருப்பில் இருப்பதில்லை. அப்படி கையிருப்பில் இல்லாத நேரத்தில் மேற்குறிப்பிட்ட அந்த நான்கு வர்த்தகர்களும் அவர்களது கையிருப்பிலுள்ள சீனியை ஆகக் கூடிய விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கின்றனர்.

வெளிநாட்டிலிருந்து விலைக்கு வாங்கி ஒரு கிலோ சீனியை இறக்குமதி செய்ய ஏற்படும் செலவு 13 ரூபா 25 சதமாகும். ஆனால் விலை தீர்மானிக்கும் ஏகபோகத்தை அந்த தனியார் வர்த்தகர்கள் கொண்டுள்ளபடியால் ஒரு கிலோ 35 ரூபா வரை விற்கப்படுகின்றது.

ச.தொ.ச களஞ்சியத்திலிருக்கும் சீனி இன்னும் ஓரிரு வாரங்களில் காலியானவுடன் ஒரு கிலோ சீனியின் விலை 40 ரூபாவாக அதிகரிக்கப்படலாம் என்றுசந்தை வர்த்தக நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.